மாத வெளியீடு

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் : 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

மாலை 11	JANUARY 1944 : சுபானு தை	முத்து 1

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
1. ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்	... ஸி. சந்திரசேகரன்	... 2
2. அழகி யார்?	... சூடாமணி	... 4
3. போகிற போக்கில்	... மணி	... 5
4. என்றும் கிழியாத பாட்டு	... பி. ஸ்ரீ.	... 7
5. பாக பத்திரம்	... ரவிகன்	... 9
6. 'சிவப்பு எண்ணெய்'ப் பனை...		... 19
7. மௌனப்பணி	... டாக்டர் டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ...	20
8. மாயவரம் ராஜமய்யர்	... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	... 23
9. கொடிக்குக் காய் கனக்குமா?	அம்மணி	... 28
10. விக்கிரமாதித்தனுக்கு ஒரு ஜயஸ்தம்பம்		... 32

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

தணிக்கையாளர் சொல்லுகிறார்.

"அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கைத் தானாகவே போக்கி விடுவதால் சுயமாக வெளுக்கும் சக்தி வாய்ந்ததென்று இதை சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதில் வெளுக்கும் 'சக்தி' அதிகமாக உள்ளதென்றும் சொல்லுகிறார்கள். ஸன்லைட் சோப்பின் நுரையை ஆடைகளுக்கு இட்டால் அது வெளுக்கும் வேலையை நமக்கு சிரமம் கொடுக்காமல் செய்து விடுகிறது. என்னுடைய சம்சாரமும், தாயாரும் எனக்கு இதை அநேக தடவை சொல்லி இருக்கிறார்கள்."

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது



இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 63-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

கண்டவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் வழங்கும் பழக்கம் அவரிடம் குறைவு. ஆனால் தமக்கு உயர்ந்தவையெனப்பட்ட தர்மங்களைத் தம் ஆயுளில் சேகரித்த பொருளையெல்லாம் கொண்டு நிறுவிய பெரியார் இவரைத்தவிர வேறு யார் இன்று தமிழ் நாட்டில் உள்ளார்கள் ?

"அகண்ட காவிரியை அழகாகக் கொண்ட ஸ்ரீரங்கம் கோவில்போல் நிற்கிறார். சுற்றுமுற்றும் வெள்ளம் வழிந்து ஓடலாம் ; அவரைத் தீண்டவில்லை" என்று சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். ஸ்ரீநிவாஸன் தம் 'தராசில்' ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரை வைத்து நிறுத்துப் பார்த்துக் கூறியுள்ளார். தராசின் முள் ஓரை அடிக்கவில்லை என்பது உண்மை. நம் புராதன நாட்டின் ஸம்ஸ்காரமும், மேல்நாட்டு நவநாகரிகப் பண்பாடும், இருகரங்கள் சேர்ந்து அணைப்பதுபோல் அவரைச் சுற்றியுள்ளன. ஸ்ரீரங்கநாதர் சயனித்திருக்கும் திருக்கோவிலைப் போலவேதான் இப்பெரியாரின் அமைதி நிலையுண்ட ஆகாரம் தோற்றமளிக்கின்றது. தூரத்திலிருந்து பார்த்தால் கோபுரத்தின்மேல் ஒளியிடும் பொற்கலசங்கள் தெரிவது போலவே, நெருங்கிப் பழகாதவர்களுக்கும் அவர் நீண்ட வாழ்க்கையின் உயர் லக்ஷ்யங்களான ஒழுக்கம், அறிவு, அமைதி முதலிய நற்குணங்கள் தெளிவாகின்றன. காலவெள்ளம் எதை அடித்துக்கொண்டு போனாலும், அவருடைய வாழ்க்கைத் தத்துவங்களை அழிக்காது. இது ஒன்றே நிச்சயம்.

அழகி யார்?

[சூடாமணி]

வேதத்தின் அழகை
விரிக்கின்ற அழகி,
வீரத்தின் அழகை
விளக்கின்ற அழகி ;

கீதத்தின் அழகில்
வளர்கின்ற அழகி,
கிளிகொஞ்சும் அழகில்
கிளர்கின்ற அழகி ;

பூதத்தின் அழகில்
புயல்கூட்டும் அழகி,
புதுநீல அழகில்
மயில்காட்டும் அழகி ;

சீதப்பனி அழகி,
செந்தழலின் அழகி ;
சிவநேச அழகி [அவள்]
ஸித்த பராசக்தி. (1)

கானத்தில் அழகைக்
காட்டுகின்ற அழகி ;
காட்டுமலர் அழகில்
காட்சிதரும் அழகி ;

வானத்தில் அழகை
வாரியிட்ட அழகி,
வட்டமதி அழகை
வார்த்துவிட்ட அழகி ;

ஞானச்சுடரழகை
நாட்டுகின்ற அழகி,
நல்ல கலைஅழகை
ஊட்டுகின்ற அழகி ;

மோனத்தனி அழகில்
முடிகின்ற அழகி ;
முடிவில்லா அழகி [அவள்]
மூல பராசக்தி. (2)

போகிற போக்கில்

சென்னையில் உலவிவரும் விறகுப் பஞ்சத்தைவிட்டுச் சற்று விலகி நிற்க எண்ணி, சமீபத்தில் 1200 மைல்கள் சுற்றுப் பிரயாணம் செய்தேன். பழைய வருஷத்தின்,—1943-ம் வருஷத்தின்— இறுதி இரண்டு வாரத்தையும் ரயிலோட்டத்திலேயே களிப்பாய்க்கழித்து முடித்தேன்.

வெளியூரில் மங்கள ஸ்நானம் வெந்நீரிலும் செய்தேன். சென்னைக்குக் கிடைக்காத என்ன பாக்கியம், என்ன போகம்! அடுப்பு ஊதிக் கண்ணீர் வடியும் ஸ்திரீகளையும் பார்க்காமல் இந்திரலோகத்தில் இரண்டு வாரம் தங்கினேன்.

மேற்கு மகா சமுத்திரம் வரையில் போயிருந்தேன். மலையும் காடும் தென்னையும் பலாவும் அடர்ந்த சோலைகளும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் அருவிகளும், அழகிய ஜனங்களும் நிரம்பிய திருவாங்கூர் ராஜ்யத்தை மறுபடியும் பார்த்தேன். இதைவிட அழகு வாய்ந்த நாடு இவ்வுலகில் உண்டோ என்று வியந்தேன்.

* * *

அநேகமாய்ப் பகல் ரயிலிலேயே போகும்படியாகப் பிரயாணத்தை வகுத்துக் கொண்டேன். மாயவரம் - திருக்கடையூர் திண்டுக்கல் - மதுரை - திருவனந்தபுரம்: மதுரை - கணபதி அக்ரகாரம் - திருக்கடையூர் - சென்னை. கரியைக்கக்கும் இஞ்சினைக் கண்கூசாமல் பார்த்து ஓட்டத்தின் மகிமையையும் தமிழ்நாட்டு இயற்கையின் அழகையும் மகிழ்ந்தேன்.

உண்மையான உயர்தரக் கல்வி வேண்டுமானால், நமது சிறுவர்களையும், சிறுமிகளையும் பகல் ரயிலில்தான், கண் கொட்டாமல் (கரி கண்ணில் விழுந்தாலும்) போகவேணும் என்று விதிக்க வேண்டும். இயற்கைக் கல்விக்கு இது ஒரு பெரிய அஸ்திவாரமாகும். பிறரை அண்டிச் சுரண்டிப் பிழைக்கும் வியாபாரிகளும் வக்கீல்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ராத்திரி ரயிலை 'ரிசெர்வ்' செய்துகொண்டுவிடலாம். அவர்களுக்குத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் நமது சிறுவர்களும், சிறுமிகளும் பகல் பிரயாணம்தான் செய்யவேண்டும். ஜன்னல் ஓரத்தைக் கைவிடக்கூடாது. அதில் எவ்வளவோ சுகமிருக்கிறது. அதுவும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிக்கு. தங்களுக்கு ஈசன் எதற்காகக் காலும் கையும் கண்ணும் கொடுத்தான்; நத்தையைப்போல், 'காம்பு கட்டில்'போல், இஷ்டப்படி காலையும் கையையும் சுருக்கிக் கொள்ளும் சக்தி இருந்தால் இரவுப் பிரயாணத்திற்கு எவ்வளவு சுகமாயிருக்கும்; மித்திரபேதமில்லாமல் பிரயாணம் செய்யலாமே; ஒத்துழைத்துச் சுயராஜ்ய பரிபாலனம் செய்யும் வழியையும்கூட இதன்மூலம் கண்டுபிடித்துவிடலாமே! - என்ற எண்ணங்கள் இரவில் செல்லும் மூன்றாவது வகுப்புப்

பிரயாணிகளுக்கு எப்பொழுதும் குறுக்கிடும். பகல் பிரயாணம் ஸ்வர்க்கபோகத்திற்குச் சமம் - எஸ். ஐ. ஆரிலும்கூட.

* * *

தவிர, இந்தச் சமயம் பகல் ரயிலை நான் தழுவியதற்கு மற்ெருரு காரணமும் உண்டு. நமது தமிழ்நாட்டின் வளத்தையும் செழிப்பையும், திருப்பதி முதல் கன்னியாகுமாரி வரையில், நானே என் கண்களாலே கண்டுகளிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அதற்கு மார்கழி மாதம்தான் முதிர்ந்த மாதம்.

என்ன கண் கொள்ளாத காட்சி! மகாலட்சுமி அவதாரமே எடுத்துக் காவேரி தீரத்தில் குடி வந்து விட்டாள் போல் தோன்றிற்று! சிதம்பரம் முதல் திருச்சிராப்பள்ளி வரையில் நெல் பயிரின் பசுமை, பச்சைக்கிளி போன்ற அழகு வாய்ந்திருந்தது. சென்னையிலிருந்து சிதம்பரம் வரையில், எவ்வளவு ஏரிகள், சிற்றருவிகள், குன்றுகள், காடுகள், கிணறுகள், ஏற்றங்கள், கைஓயாமல் பாடுபடும் குடியானவர்கள்! சிட்டுக்குருவி போல் அழகு வாய்ந்த வயல்கள். காமதேனுபோல் பசுக்கள்—யுத்தத்தில் குறைந்து வருகின்றன!

இந்த இயற்கை அமைப்பும், வளமும், செல்வமும் நிறைந்த நமது நாட்டில் ஏன் அன்னப்பஞ்சம், விறகு-விசாரம்? மூலகாரணம் என்ன? திருத்த வழி இல்லையா?

பசுவில் சுரக்கும் பாலைக் கன்றுக்கல்லவோ முதல் முதலில் கொடுக்க வேண்டும்? அது குடித்து மிச்சமிருந்தாலும், அதை அன்னியர் அடையலாமா என்ற இயற்கை நியாயம் எனக்கு அடிக்கடி காபி குடிக்கும்போதெல்லாம் தோன்றும். மானிடப் பிறப்பில் எவ்வளவு 'அடாவடி'க்காரியங்களும் முரண்பாடுகளும், புரட்டும் குடிகொண்டிருக்கின்றன!

நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபடும் உழவனுக்கு ஒரு கை அரிசி, ஒரு வேளைச் சோறுதான். ஒரு சாண் வயிற்றுக்கு இரண்டு படிநெல் பண்ணைக் கூலி போதாதா என்ற மிராசுதார் வேதாந்தம். அதைச் சுரண்டும் மிராசுதாருக்கு இரண்டு வேளைச்சோறு போதாதா; இதற்குமேல் என்ன?— என்று எண்ணி மிராசுதாரைச் சுரண்டும் மேல் அதிகாரியோ, ஜமீன்தாரோ, சர்க்காரோ! சின்னச் சர்க்காரைச் சுரண்டும் பெரிய சர்க்கார்! பெரிய சர்க்காரைச் சுரண்டும் இன்னும் பெரிய ஏகாதிபத்தியம். பூச்சியைத் தவளை, தவளையைப் பாம்பு, பாம்பை மனிதன் விழுங்காவிட்டாலும், இடுப்புக்குப் பெல்டாக்கிப் போட்டுக்கொள்ளக் கொலை! ஓழியாத யுத்தமும் பஞ்சமும் இவ்வுலகில் உலவுகிறது என்ன ஆச்சரியம்!

மிதபோகியாயில்லாமல் சுரண்டிக் கொழுக்கும் ஜீவனை பார்க்கப் பகட்டாயிருந்தாலும், ஆற்றங்கரையோரத்தில் செழித்து ஓங்கும் மரங்கள்போல், தன் இனத்திற்கு ஏற்பட்ட வாழ்நாளை முழுவதும் செலுத்தாமல், திடீரென்று அழியும். நமது ஹிந்து நாகரிகத்தின் அடிப்படையான கொள்கை இது. இதர மதங்களிலும் இது முக்கியமான கொள்கை. இதர ஜீவனை அழித்து நீ வாழ்ந்தால், நீயும் கிரமம் தப்பிச் சீக்கிரத்தில் அழிக்கப்படுவாய்; அழிந்து போவாய்! காட்டை அழிக்கும் ஆட்டுக்கு இயற்கையான சாவும் உண்டோ? நீ அழித்தால் நீ அழிபடுவாய். இது கிறிஸ்துவ மதத்திலும் ஓர் முக்கியமான கொள்கை. ஆனால் மேல் நாட்டு நாகரிகம் இதை 1943 வருஷ காலங்களாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறதா?

* * *

இப்பொழுது புது வருஷம் பிறந்திருக்கிறது. 1944 முதற்கொண்டாவது உலகத்திற்கு உண்மையில் அஹிம்சையை ஒட்டின புத்துயிர் உண்டா? அஹிம்சை பிறந்த இந்தியாவுக்கு விடுதலையும் மறு மலர்ச்சியும் இல்லாமல், உலகத்திற்கு விடுதலை ஏது? உல

என்றும் கிழியாத பாட்டு

[பி. ஸ்ரீ.]

ஒருநாள் ஒரு பாட்டி ஓர் அரசனிடம் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்போது, அருமையாக நெய்யப்பட்டிருந்த ஆடை ஒன்றை அவன் பார்த்துக்கொண்டே கொஞ்சம் பராக்காக இருந்துவிட்டான். அப்போது இவர் பளிச்சென்று,

> நூற்றுப்பத் தாயிரம்
> பொன்பெறினும் நூற்சிலை
> நாற்றிங்கள் தன்னில்
> கிழிந்துபோம்; - மாற்றலரைப்
> பொன்றப் புறம்கண்ட
> போர்வேல் அகளங்கா !
> என்றும் கிழியா(து)
> என்பாட்டு !

[நாற்றிங்கள் - நாலு மாசம். மாற்றலர் - சத்துருக்கள். பொன்ற - அழிய. புறம் கண்ட - தோற்கடித்த. அகளங்கா - களங்கமற்றவனே.]

என்று பாடிக் கவிதையின் அழியாத அருமை பெருமைகளை வற்புறுத்தினாராம்.

"என்றும் கிழியாது என் பாட்டு" என்ற வாக்கிலே தன்னம்பிக்கைதான் எப்படி ஜொலிக்கிறது, பாருங்கள் !

'நல்ல தமிழ்'

இந்தப் பாட்டி யார்? கவிச் சுவையையும் தமிழ்ச் சுவையையும் மற்றச் சுவைகளுக்கெல்லாம் மேலாக மதித்த ஔவையார்தான்.

'செந்தமிழ் நாடு' என்று அந்த நாளில் சிறப்பாகச் சொல்லப்பட்ட

கில் சமாதானம் ஏது? இந்தப் பழைய திட்டத்தை அரசியல் வாழ்வில் முழுவதும் புகுத்தி அமுலுக்குக் கொண்டு வரக்கூடிய தலைவர்கள் உலகம் முழுவதிலும், முக்கியமாய் இந்தியாவில், தலைமறைந்திருக்கிறார்கள் ; அல்லது தலைமறைவாய் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவும் கலியின் கூத்துத்தான்.

அரசியலில் வியாபாரிகளின் ஆட்சியையும், பெரிய முதலாளிகளின் செல்வாக்கையும் ஒழித்து, தீர்க்க திருஷ்டியுள்ளவர்களின் பார்வையையும், தீர்க்க ஆலோசனை யுள்ளவர்களின் ஆலோசனையையும், சாந்தர்களின் களிப்பையும் சாந்தத்தையும் நாம் புகட்டும் வரையில், உலகத்திற்கு க்ஷேமம் கிடையாது. செல்வம் கரை புரண்டு போனால், நக்கிக் குடிக்கக்கூட ஏழை ஜனங்களுக்குக் கொட்டாங்கச்சி தண்ணீர்கூடக் கிடைக்காது. கோடீச்வரர்கள் குட்டையில் தான் தேங்கி நிற்கும். அந்தக் குட்டைக்கும் முள் வேலி போட்டு மின்சாரத்தை ஊட்டி உயிர் குலைக்க உயிரிட்டுத் தற்காலம் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பழைய தர்மத்தை ஒட்டிய உன்னதக் கொள்கைகளைக் கையாண்டு நிர்மாண வேலைசெய்யும் ஒரு தொண்டுப் படையை (இரண்டு உண்மைத் தொண்டர்கள் இருந்தாலும் போதும்) நாம் 1944-ம் வருஷத்தில் ஸத்சங்கமாய்க் கூட்ட முடியுமானால் அதுவே புத்துயிர் பிறக்க ஒரு பெருஞ்சேவை. 1944-ம் வருஷம் உண்மையில் புது வருஷப் பிறப்பாகும். இந்தச் சகாப்தத்தை உண்டுபண்ணின மகானுக்கு அடங்காத பிரீதியும் களிப்பும் உண்டாக்கும்.

—மணி

பாண்டி நாட்டில் அரசனும் ஜனங்களும் மனம் ஒத்துத் தாய் மொழியை வளர்த்து வந்ததைப் பெரிதும் பாராட்டி ஔவையார் அரசனை நோக்கி, "பாண்டிய!நின் நாட்டுடைத்து நல்ல தமிழ்" என்று குதூகலமாகச் சொன்னார். இத்தகைய பாஷாபிமானம் ஔவையாருக்குக் கவிதா தேவியின் மீதுள்ள பக்திக் காதலையும் விசேஷமாக வளர்த்துவிட்டதென்று சொல்லலாம்.

கல்வியும்—கவிதையும்

பொதுவாகக் கல்வித் தெய்வத்தின் மீதுள்ள பக்தியும், சிறப்பாகத் தமிழ்த் தெய்வத்தின் மீதுள்ள பக்தியும் சேர்ந்து கவிதா தேவியின்மீது இவருக்குள்ள விசேஷ பக்திக்கு வளர்ப்புப் பண்ணையாக அமைந்ததென்று ஊகிப்பதற்கு, இவர் பாடிய 'அசதிக் கோவை' என்ற நூலிலுள்ள பின்வரும் பாட்டும் ஒரு சான்று தருகிறது :—

அற்றாரைத் தாங்கிய வைவேல்
அசதி அணிவரைமேல்
முற்றா இளநகை எவ்வாறு
சென்றனள், முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவும்,கல் லாதார்
இணக்கமும், கைப்பொருளொன்(று)
அற்றார் இளமையும் போலே
கொதிக்கும் அருஞ்சுரமே !

[வை - கூர்மை. அணி வரை - அழகிய மலை. முற்றா இளநகை - (இங்கே) இளம்பிராயத்துப் பெண். சுரம் - பாலைவனம்.]

காதலி காதலனோடு நடந்து சென்ற அந்த வனம் ஒரு பாலைவனம் என்கிறார். அது எப்படிக் கொதிக்கிறது, தெரியுமா ? 'தீயைப்போல்' என்று கூடச் சொல்லவில்லை. 'முத்தமிழ் நூல் கற்றார் பிரிவு' போலக் கொதிகிற தாம். கல்லாதார் சிநேகம் போலவும் கொதிக்கிறதாம்.

இந்தப் பாட்டியாருக்குப் பொதுவாகக் கல்வியிலும், சிறப்பாகத் தமிழ்க் கல்வியிலும் எத்தகைய அபார மோகம், பாருங்கள்! இந்த மோகத்திலே விளைந்த கவிதையைத்தான் பாருங்கள். "நல்ல தமிழ், நல்ல கவிதை, என்றும் கிழியாத பாட்டு" என்றெல்லாம் பாராட்டத் தோன்றுகிறதல்லவா ?

கல்வியும் கவிதையும் ஞான மார்க்கத்திலும் ஔவையாருக்கு உயர்ந்த லட்சியத்தைச் சுட்டிக் காட்டின. ஞானமும் கல்வியும் தானமாகவும் தவமாகவும் கனிந்தால், மோட்சம் தானே வழிதிறந்து காட்டும் என்கிறார். இத்தகைய கல்வியைக் குறித்தும், இதன் விளைவுகளைக் குறித்தும்,

ஒன்றாகக் காண்பதே காட்சி ; புலன்ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் ;-என்றானும்
சாவாமல் கற்பதே கல்வி ; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்

என்று ஔவையார் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார்! இதுவும் 'என்றும் கிழியாத' பாடல்களில் ஒன்று.

பன்மையில் ஒருமை என்ற ஒரு வேதாந்தக் காட்சியைக் காட்டுவதும், இந்திரிய ஜயம் பண்ணும் வீரத்தையே வீரமாகக் கௌரவிப்பதும், சோற்றுக் கவலையால் சுதந்திரத்தை இழக்கலாகாதென்று வற்புறுத்துவதும் கல்விப் பயிற்சியின் முடிவான நோக்கமாயிருக்க வேண்டுமென்பது குறிப்பு.

இத்தகைய கொள்கை ஔவையாரின் கவிதையை உருவாக்கியது போல், இவரது வாழ்க்கையையும் குணாதிசயத்தையும் உருவாக்கியிருக்க வேண்டும்.

— —

நாடகம்

பாகபத்திரம்

[ரஸிகன்]

அங்கம் - 3

காட்சி 2

(மறுநாள் காலை, சுமார் எட்டு மணியிருக்கும். திண்ணையில் நீலகண்டையர், ராமகிருஷ்ணய்யர், சீதாராமன் முதலியோர் உட்கார்ந்திருக்கிறார்கள். கணக்குப் பிள்ளை பாகபத்திர நகல் தயார் செய்து கொண்டிருக்கிறார். வாசலில் வீட்டு வண்டி வந்து நிற்கிறது. கிழ நாகப்பன் சுப்புணியை இறக்குமுன் அவன் குதித்து வாசற்படிப் பக்கம் ஓடுகிறான். திண்ணையில் சீதாராமனைக் கண்டதும் அவனண்டை ஓடிக் கழுத்தைத் தழுவிக் கொண்டு)

சு :—என்ன, சித்தப்பா, என்னை ஏச்சுப்புட்டு எங்கியோ போய்ட்டியே! அன்னி சாயங்காரம் தேடுதேடுன்னு தேடினேன். ஒன்னைக் காணவே காணும். அப்பரம் ராத்திரி அம்மா—நான் ரேழியிலே படுத்துண்டு தூங்கிப்புட்டேன்—என்னெ இழுப்பி கண்ணுமேல ஜெலத்தைவிட்டு, நீ கணக்குப்புள்ளெ யாத்திலே யிருப்பேன்னு, ஒன்னெ சாப்படரத்துக்கு அழைச்சுண்டு வரச் சொன்னா. அங்கெ போய்க்கேட்டா, அவாத்து அம்மாமி 'அவன் மத்தியானமே ஆத்துக்கு வந்துட்டானே, அப்பரம் இங்கெ வரல்லே'ன்னுட்டா. எங்கே போய்ட்டே நீ?

சீ :—(அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு) முள்ளிப்பள்ளம் போனேன். (பேச்சை மாற்ற) என்ன, கந்தமங்கலத்திலே திருநாள் ரொம்ப ஜோர்தானோ?

சு :—ஏம்மாடி, எவ்வளவு கூட்டம்! அதுவும் மோளக்காரன் கிட்ட எள்ளுப் போட்டா எள்ளு விழாது; அஞ்சு ஜெதெ வந்திருந்தது, சித்தப்பா!

ரா :—(பரிகாசமாய்) ஏண்டா, சுப்புணி, பயல்கள்ளாம் நன்னா ஊதினாளா?

சு :—(அப்பொழுதுதான் அவரைக் கவனித்தவன்போல) நீங்க எப்பொ வந்தேள், அத்திம்பேரே, சித்தப்பா வந்து அழைச்சுண்டு வந்தாளா? (ராமகிருஷ்ணய்யர் பதில் சொல்லத் தெரியாமல் திகைக்கிறார். சீதாராமனுக்கு அசட்டுச் சிரிப்பு அதிகரிக்கிறது. நீலகண்டய்யர் விஷமமாய்)

நீ :—அடெ, அதெப்படிடா நீ கண்டு புடிச்சே? அத்திம்பேர் மட்டும் இல்லேடா, இன்னும் உள்ளே யார் வந்திருக்கா போய்ப்பாரு. (சுப்புணி உள்ளே ஓடுகிறான். நாகப்பன் வண்டிப்பூட்டை அவிழ்த்துவிட்டு மாடுகளைக் கொட்டிலில் கட்டிவிட்டு ஆளோடியண்டை வந்து நிற்கிறான். வெகு நாளைக் குடியானவன். நீலகண்டையரையே குழந்தையில் எடுத்துத் தூக்கிவிளையாடினவன். திண்ணையில்எல்லோரும் உட்கார்ந்திருப்பதும், கணக்குப்பிள்ளை மும்முரமாக எழுதுவதும் அவனுக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது. நீலகண்டையரைப் பார்த்துத் தழதழத்த குரலில்)

நா :—அய்யா.

நீ :—என்னடா?

நா :—நான் வூட்டுக்குப் போகட்டுங்களா? பசிக்குது.

நீ :—உள்ளே போய் ஏதாவது பழயது இருந்தா வாங்கிண்டு போ. போய்ட்டு உருமத்துக்கு, பயலுவள்ளாம் வேலைவிட்டு வந்ததும் அழெச்சுட்டு வா.

நா :—வர்றேனுங்க—என்ன விசேஷங்க?

நீ :—எல்லாம் நல்ல விசேஷந்தாண்டா. ஒங்க சின்னய்யரு வேறெ போப்பாரு. சொவந்தெக் கணக்கு

களைப் பாத்துப் புதுசாத் தனித்தனியா எழுதிப்படணுமோல்லியோ ?

நா :—(கண்ணில் வயோதிகர்களுக்குச் சட்டென்று கிளம்பும் கண்ணீர் ததும்ப) ஐயோ, அறியாப்புள்ளெயாச்சே, அப்படி விட்டுடலாமா நீங்க? நீங்கதானே தாய் தோப்பன். பெரியய்யா போரபோது, 'நாவப்பா, எனக்கு வயசாச்சு, போக வேண்டியதுதான். இந்தப் புள்ளெக்கி ஒரு கொழந்தெ பொறந்து பாத்துட்டுப் போனாத் தேவலேன்னு நெனச்சேன். நாமொண்ணு நெனைக்க தெய்வமொண்ணு நெனைக்கராது. ஆனா சின்னய்யிரு நல்ல புள்ளெ. ஆளாக்கிடுவாரு'ன்னு சொன்னாங்களே.

ரா :—எல்லாம் காலாகாலத்திலே எற்பட வேண்டியதுதானே, நாகப்பா, புள்ளெகள் மனுவாயிட்டா, அததங் காரியத்தை அதது பாத்துக்கவேண்டியதுதானே.

நா:—நீங்க சொல்ரது சரிதானுங்க. இருந்தாலும், இன்னம் நாலு வருசம் போவலாம். ஏதோ கீழ்சாதி, படிப்பில்லாதவன் சொல்ரானேன்னு நெனைக்காதிங்க, சாமி, கையெ மூடிக்கிட்டிருந்தாத்தான் கெவுரவம், கையை தொரந்துட்டா ஒண்ணுமில்லெ. ஊர்லே பெரியய்யிரு வீடுன்னா பள்ளு பறை மொதல் அய்யம்மார் உள்பட ஒரு தனி மதிப்பில்லே? அதுதான் பெரிசு. ஒத்துமெ கொரஞ்சு போய்ட்டா ஊருக் கெளிசுதானே, அதுதான் சொல்ல வந்தேன்.

சீ : —(கொஞ்சம் வெறுப்பாய்) நாகப்பா, வெய்யிலாகுது, ஏன் நிக்கரெ? வீட்டுக்குப் போ, ராத்திரிக்கூடச் சோறு திங்கல்லெப்போலேருக்கே.

நா:—(நோக்கத்தைத் தெரிந்துகொண்டு) நாம்போரேன், சாமி. ராத்திரி எனக்கொண்ணும் கொறவில்லெ. கொழந்தெ ரெண்டணாக்காசு குடுத்து, 'நாகப்பா, நீ வயர்நரையச் சாப்புட்டுவா'ன்னு சொல்லிச்சு, என் ராசா, அந்த வார்த்தெயொண்ணே எனக்கு வயர் நரஞ்சு போச்சு (என்று சொல்லிக்கொண்டே உள்ளே போகிறான். அங்கே ஒரு விசித்திரக் காட்சி. கூடத்திலும் தாழ்வாரத்திலும் புதுப்பாத்திரங்களும் பழைய பாத்திரங்களுமாய்ப் 'பரத்தி'யிருக்கிறது. பட்டம்மாள் அவைகளை வீடுகூட்டியின் உதவியைக் கொண்டு, முற்றத்தில் இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்து வைத்துக்கொண்டிருக்கிறாள். ரேழி அரிகால் நாதாங்கியைப் பிடித்துக்கொண்டு சுப்புணி இது ஒரு ஆச்சரியம்போல் பார்த்துக்கொண்டு நிற்கிறான். பட்டம்மாள் ஒரு பெரிய வெந்நீர்த் தவலையைக் காட்டி அதை எடுத்து வலது கைப்புறமாயிருக்கும் பாத்திரங்களோடு சேர்க்கச் சொல்லி வீடு கூட்டி மீனாம்பாளை உத்தரவு பண்ணுகிறாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த காமாக்ஷி)

கா :—இந்தாடி, மீனாம்பா, அதைத் தொடாதே. இன்னம் அவ்வளவு கிரிசெகெட்டுப் போய்டல்லே, வெந்நீர்த் தவலையை சூத்திரச்சி தொடும்படியா.

ப :—தொட்டா ஒட்டிண்டுடரதோ ? எல்லாம் எனக்குத் தேவலே.

கா :—ஒனக்குத் தேவலையாயிருக்கலாம், எனக்கு வாண்டாம் அந்தப் புது வழக்கமெல்லாம்.

ப :—இப்பொ ஒங்களுக்கு யாரு வேணும்னா? அந்தத் தவலையை எனக்குன்னா எடுத்து வெச்சிண்டிருக்கேன்.

கா :—அப்படியா சேதி? ஏண்டியம்மா, மூணு வெந்நீர்த் தவலெ இருக்கே அதைத் தவிர: அதுபோராதோ, இந்த அம்பது வருஷத்துப் பாத்திரத்தையும் எடுத்து வெச்சுண்டுடணுமோ?

ப :—என்னவோ நீங்க வாங்கி வெச்சாப்பிலே சொல்லரேளே, மூணு தவலெ இருக்குன்னு! ரெண்டு எங்காத்திலே வாங்கிக் குடுத்தது, ஒண்ணு நான் வாங்கினது. அதுக்காகப் பெரியவா நாளைப் பாத்திரம் பெரிய உருப்படி எனக்கொண்ணு வாண்டாமோ?

கா :—ஏன், நீ பெரியவா நாளைப் பாத்திரம் ஒண்ணு கூட எடுத்துக்கல்லியோ? அதொ எடுத்து வெச்சிருக்கரதெல்லாம் என்ன? நீ வாங்கிப்பிட்டேன்னு பீத்திக்கிண்டெயே, எங்கே

யிருந்து வாங்கிப்பிட்டே, கெழங்காட்ட மாயிருந்த காது வெச்ச போகிணி,மாமி யாருமெப் போட்டுப் புட்டுத்தானே புளியோடாட்டமா அந்தத் தவலையை மாத்தினே, வாண்டாம் வாண்டாங் கரத்தே.

ப:—எங்கிட்டெ மொல்லு மொல்லுனு சண்டைக்கி வராதேயுங்கோ, எனக்கு ஒடம்பிலே வல்லமெ இல்லெ ஒங்களோடே சண்டைக்கி நிக்க. (வீடுகூட்டியைப் பார்த்து) என்னடி சொல்ரேன்? நிக்கரையே ஒலக்கயாட்டமா! எடுத்து வையடி அங்கே அந்தப் பெரிய தவலெயெ! (அவள் எடுக்கப் போகிருள்).

கா:—(கோபமாய்) எட்டி, அதைத் தொட்டயாக் கையை முறிச்சுடுவேன்!

ப:—(ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து தவலையைத் தூக்கிவைத்து) அவ கையெ முறிக்கலாம், இப்பொ ஆரு கையெ முறிக்கரது!

கா:—(தவலையைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு) எல்லாம் ஒங்க சாதனையே சாதிச்சுப்படலா முன்னு நெனைச்சிண்டிருக்கேளோ?

(பட்டம்மாள் ஆத்திரமாய் அவள் கையிலிருந்து தவலையைப் பிடுங்குகிர வேகத்தில் காமாக்ஷி தடுமாறிக் கீழே விழுகிருள். இதைப் பார்த்ததும் சுப்புணி 'அய்யோ அம்மா!' என்று கத்துகிருன். கிழ நாகப்பன் ஆத்திரமாய், பட்டம்மாளைப் பார்த்து)

நா:—என்னம்மா, ஒனக்கு ஞானமில்லெ, மகாலச்சுமியாட்டம் பெரியம்மா, அந்தம்மாகிட்டெசண்டெக்கிநிக்கலாமா? (இதற்குள் சுப்புணி போட்ட சத்தத்தைக் கேட்டு நீலகண்டையரும் பின்னோடு சீதாராமனும், உள்ளே ஓடி வருகிருர்கள். நடந்த விஷயத்தை ஒரு நொடியில் கண்டு கொண்டு, வெகு காரமாகத் தன் அகமுடையாளைப் பார்த்து)

நீ:—ஆரம்பிச்சுட்டையா ஒன் தொழிலெ! நேத்தே என்ன சொன்னேன், பாத்தரம் பண்டம்னு இந்தக் கண்டானும் முண்டானுக்கும் யுத்தம் பண்ணிண்டு ஊர் கூட்டப்படாதுன்னு சொல்லலெலெ?

கா:—(அழுதுகொண்டு) ஏறுமாறுன்னு என்னெத்தான் சொல்லலாம். நேத்திக்கி வந்த நாயெல்லாம் கும்மாளம் அடிக்கிரது. இரவது வருஷமா இந்த வீட்டுக்கு ஒழச்சுப்புட்டு இன்னிக்கும் நான் தான் புக்காத்து நாட்டுப் பொண்ணு அடங்கி ஒடுங்கி யிருக்கணம்னு கண்டனெ தண்டனெயெல்லாம்.

நீ:—வாண்டாம், வாசலெலெ போய் அவுத்துப் போட்டுண்டு கூத்தாடேன்!

கா:—எனக்கொண்ணும் கூத்தாட வாண்டாம். கூத்துக் கட்டி அடிக்கரவா அடிக்கட்டும். பெரியவா காலத்துப் பாத்தரம் ஒண்ணுகூட எனக்கு பாத்தியமில்லையா? இந்தப் பெரிய வெந்நீர் தவலெ யிருக்கட்டும்னு சொன்னத்துக்கு எங் கையிலேருந்து அதெப் புடிங்கினது மில்லாமெ, என்னெப் புடிச்சு கீழெ தள்ளராளே, இது அடுக்குமா?

நீ:—அதோடெ விட்டது பெசகு, ஒன் கையெ ஒடிக்கணம், கடிக்கழுதை!

கா:—(துக்கம் தாங்காமல் வாய்விட்டு அழுகிருள்) அப்படித்தான் சொல்லு மேலெ நீங்க, நான்தான் எல்லாருக்கும் எளிசித்தி. (இதைக் கேட்டதும் சீதாராமன் அவன் அகமுடையாளை அடிப்பான் போலக் கையை ஓங்கிக்கொண்டு கிட்டே போகிருன். அவள் அசையாமல் விழித்துப் பார்க்கிருள். நீலகண்டய்யர் அவஸரமாய்க் கையைப் பிடித்து அவனை இழுத்து வாசற்படிக்கு வெளியே விட்டு விட்டு)

நீ:—போடா முட்டாள்! அந்த க்ஷாமங்கள் ஏதாவது பண்ணிண்டுபோரது, இதுலெ போய் நாம் தலையிடலாமோ?

(இருவரும் திரும்பி வாசலுக்கு வந்து விடுகிருர்கள். சுப்புணி தன் தாயார் அழுவதைக் கண்டு தன் கண்ணிலும் ஜலம் ததும்ப அங்கேயே உட்கார்ந்து விடுகிருன். பட்டம்மாள் சமையல் கட்டுக்குள் போகிருள்.)

நா:—அம்மா, அது கெடக்கு ரெண்டுங் கட்டான். நீங்க கண்ணுலெ ஜலம்

வுடாதேயுங்க, ஆவாது. ஏதோ குடி குடுத்தனமாப் புள்ளெயுங் குட்டியும் நல்லாயிருக்கட்டும். அய்யிரு வெகுளி. எல்லாம் அந்தப் பொண்ணுதான், இவ்வளவு துருசு பண்ணியிருக்கு, இல்லாபோனா இந்தக் காரியமெல்லாம் நடக்குமா? பாக்கட்டும், கலியாணத்தெப் பண்ணிப் பாரு, வீட்டெக் கட்டிப் பாருன்னுப்பிலே குடும்பம் பண்ணிப் பாத்தாத்தானே அதிலேருக்கர செருமம் தெரியும். துள்ளின மாடு தானே பொதி சொமக்கரது.)

கா :—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) அதில்லேடா, நாகப்பா, எனக்கு வயத்தெரிச்சல்! வேறெ குடுத்தனம் போடணும்னு இங்கே யார் வாண்டாங்கப் போரா? ஏதோ, செருசுகளுக்கிருக்கரது தான் ஆசை. அதுக்காக, இந்த நாத்தத் தவலெக்கி என்னை இவ்வளவு பாடுபடுத்திப் புட்டாளே! போன வருஷம் கொறையிலேபோய் ஆறு மாசம் படுத்த படுக்கையாக் கடந்தாளே, எத்தனெ பீ வாரிப் பொடவை தோச்சுப்போட்டு தூக்கி எடுத்து, வீட்டுக் காரியத்தோடே காரியமா ஒண்டியா நின்னு அவஸ்தெப் பட்டேன். எந்த நாத்தனாரும் சித்தம்மையும் பெரியம்மையும் வந்து நின்னு செய்யரத்துக்கு? அது ஒண்ணுக்கு இவ ஒடம்பெ எனக்கு செலுப் பாத் தெச்சுப் போட்டாலும் போருமா?

நா :—அம்மா, அது கடக்குப் போங்க. நீங்க ஒண்ணையும் மனசிலே வெச்சுக்காதேயுங்க. நடக்கரது நடந்து போச்சு. ஒரு நல்ல நாளெப்பாத்து புதுக் குடுத்தனம் போட்டு ஒங்க கையாலெ சாமானெக்கொண்டெ வெச்சு வௌக்கேத்தி வையுங்க. அப்பொதான் வௌங்கும்.

கா:—அதெத்தாண்டாப்பா எல்லாரும் வேண்டரது. (எழுந்து உள்ளே போய் நாகப்பனுக்கு ஈயக் கச்சட்டியில் பழையதைக் கொண்டுவந்து கொடுக்கிருள். அதை வாங்கிக்கொண்டு கொல்லைப் பக்கம் போகிருன்).

அங்கம் - 4

[மேல் கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு வருஷமாகிறது. ஒருநாள் காலை சுமார் எட்டு மணி இருக்கும். நீலகண்டையர் வீட்டுக்கு இரண்டு வீட்டிற்கு மேற்கேயுள்ள சின்ன வீட்டின் கூடத்தில் சீதாராமன் ஸ்நானமான பிறகு வேஷ்டியைக் கச்சமாகக் கட்டிக்கொண்டிருக்கிருன். பழக்கமில்லாததால் கச்சம் சரியாகக் கட்டமுடியாமல் அவிழ்ந்தவிழ்ந்து போகிறது. இதைப் பார்த்துக் கொண்டு சமையலறை வாசலில் நிற்கும் அவன் ஸம்ஸாரம் பட்டம்மாள் சிரிக்கிருள். அது அவனுக்கு ஆத்திரம் மூட்டுகிறது.]

சீ :—கொல்லக்காட்டு நரி பல்லெப் பல்லெக் காட்டித்தாம்னு இப்பொ என்னத்தெக் கண்டு சிரிச்சாகரது? மணி எட்டாச்சு, இன்னும் ஒரு நாழிக்கெல்லாம் சாஸ்திரிகள் வந்துடுவர். பதிஞரு மணிக்கெல்லாம் சிராத்தம் முடியணும். சமயவேலையெப் பாக்காமெ இங்கென்ன ஸதிரு?

ப :—இங்கெ ஒத்தரும் ஆடக் காத்திண்டிருக்கல்லெ! சமயல் ஆய்த்தானே ஆகணும். ஒங்களுக்கு நான் பயப்படலாம், அடுப்பு பயப்படுமோ?

சீ :—நீயும் பயப்பட வாண்டாம், அடுப்பும் பயப்பட வாண்டாம், அடுப்பெ வெட்டிக் கணத்திலே போடு. சிராத்தமுமாச்சு சிராத்தமுமாச்சு,— ஒண்ணாவது மணிக்கித் திருவாளூர் முன்சீப் கோர்ட்டிலே ஆஜராயிருக்கணும், இல்லாபோனா தலே போய்டும்.

ப :—அப்படி என்ன வந்துட்டுது ஆபத்து? அதிருக்கட்டும், திருவாளூருக்குப் போனா, நான் மூணு மாசமாச் சொல்லிண்டிருக்கேன், ஆகட்டும் ஆகட்டும்னு ஆட்டம் போடரேளே! கட்டிக்கிறத்துக்குத் துணியே யில்லெ, அந்தக் கன்னடித்தாட்டுப்பத்திரிப் பொடவெ ஒண்ணு எடுத்துண்டு வாருங்கோ.

சீ :— (ஆத்திரம் அதிகரிக்க) இந்த எழவே பெரிய எழவாப் போச்சு; பொடவெ வேணும், ரவிக்கெ வேணும்

அது வேணும், இது வேணும்—இந்தப் பேச்சுத்தானா ஸதா ? மனுஷனுக்கு வீட்டுக்குள்ளே காலெடுத்து வைக்கணுமேன்னு இருந்தா, அப்பறம் என்ன சுகம் ?

ப :—அய்யோ பாவம், குடுத்தனம் பண்ணாரது இவ்வளவு கஷ்டம்னு நீங்க தான் கண்டு புடுச்சிருக்காப்பிலே யிருக்கு ! ஏன், ஒடனெடத்தவா பண்ணல்லியோ ? அவாளுக்கு நாமென்ன கொறைஞ்சு போய்ட்டோம் ?

சீ :—அவள் கால்தூசி வெலெ பொர மாட்டே, அவ பதவிசும், குடித்தனப் பொறுப்பும், மனுஷாள்கிட்டெ நயமும், ஊர்லெ எல்லாரும் அவளெ மெச்சுக்கத் தான் மெச்சுக்கரா.

ப :—அப்பொ எல்லாரும் என்னைத் தூத்தராளோ ? நீங்கதான் வாய்க்கு வாய் ஒங்க அண்ணா ப்ரதாபத்தெயும் மன்னி கொணத்தையும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போறேள்.

சீ :—அதுக்கென்ன ஆக்ஷேபணெ ? சொல்லிப்புட்டாச் சரியாப் போச்சா ? அவ போட்ட தயிரும் தேச்ச எண்ணெயுந்தான் இன்னும் என்னைக் காப்பாத்தாது. நல்ல சோத்தைக் கண்டு வருஷம் ரெண்டாச்சு (என்று தானறியாமலே பெருமூச்சு விடுகிறான்.)

ப:—(வெகு கடுமையாக) நல்ல காரியம், அப்பொ அங்கேயே போயிருங்கோ, நான் ஊரெப் பாக்கப் போரேன். மறுபடியும் நல்ல சாப்பாடு சாப்பிட்டு ஒடம்பைத் தேத்திக்குங்கோ.

சீ :—ஒரு நாழி பின்னெ தொலெ ! —நான் ஏதாவது பண்ணிக்கிறேன். (இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே கிமிந்திரணத்துக்கு வரிக்கப்பட்ட ராமகிருஷ்ணய்யரும் ஸ்நானம் ஸந்திகளை முடித்துக்கொண்டு வேஷ்டி துவைத்து எடுத்துக்கொண்டு உள்ளே வருகிறார். அவரைக்கண்டதும் பட்டம்மாள் சமையலறைக்குள் செல்லுகிறாள்.)

ரா :—ஏண்டாப்பா, நாழியாகரதே, சாஸ்திரிகளெக் காணுமே ?

சீ :—அது ஒரு பிரும்ம சவுசம், அவசரமே கிடையாது ஒடம்பிலே. காரியம் இருக்கு, சித்தெ மின்னடி சிராத்தம் ஆகணும்னா அன்னிக்கித்தான் ஒரு நாழி கூடஆகும். அந்த முன்சீப்போ ஒரு கொரளி. அஞ்சு நிமிஷம் கெழிச்சுப் போனா அதுக்குள்ளே கேஸ் பைஸலாயிடும்.

ரா :—ஆமாம், இன்னிக்கி விசாரணைனு நிச்சயமாத் தெரியுமோ? எனக்கு ஸம்மன் வரல்லையே.

சீ :—இன்னிக்கித்தான், அவசியம் வரணும்னு குமாஸ்தா ராமநாதையர் நேத்து சுப்பக்காளாத்து வெங்கட்டராமனைக் கண்டு சொல்லியனுப்பிச்சார்னா. ஒங்களுக்கு ஸம்மன் வரல்லேன்னா ஒங்களெ விசாரிக்க வாண்டாம்னு விட்டிருப்பான். —(கசப்பாய்) விசாரிக்கரத்துக்கென்ன இருக்கு ? ' பணம் வாங்கினியா ? குடுக்கவேண்டியதுதானே ?' ரெண்டு கேழ்வெதானே ? கையோடெ தீர்ப்புச் சொல்லப்போறான். அதெ யோசிச்சா நான்கூட எதுக்குப் போகணும்னு தோணறது. பண்ணர தீர்ப்பெ எக்ஸ்பார்ட்டியாத்தான் பண்ணட்டுமே.

ரா :—சீச்சி, அது தப்பு. நீ ஆஜராகி நோட்டு 'மேடோவர்' பண்ணிக் குடுத்தவர் இன்னார், அவரைப் பிரதிவாதி பக்ஷம் விசாரிக்கணும், அவருக்கு ' ஸம்மன் ஸார்வு' ஆகரத்துக்காக ஈரங்கி ஒத்திக்குடுக்கணும்னு வக்கீலெக் கேக்கச் சொல்லு, அதுதான் வழி.

சீ :—ஆமாம், ஒத்தியே கொடுத்தான்னு வெச்சுக்குவோம். நீர் கூண்டுலே ஏறி என்ன சொல்லப்போரீர் ?

ரா :—என்னவா ? நான் மேடோவர் பண்ணிக்குடுக்கர காலத்திலேயே ஒன்னைப் பணம் இன்னும் ஒரு வருஷத்துக்காவது கேக்கப்படாதுங்கர கண்டிஷன் பேர்லேதான் மேடோவர் பண்ணினேன். அந்த அயோக்கியப் பயல் அதுக்கு ஒப்புக்கொண்டு நயவஞ்சகம்னா பண்ணிப்பிட்டான்.

சீ :—ஆமாம் ஸ்வாமி, நீர் இப்படிச் சொன்னா முன்சீப் நம்பவாண்டாமா? நோட்டிலே வெறும் இண்டார்ஸ்மெண்டு தானேயிருக்கு, 'சண்டிஷனெ'ப்பத்தி ஒண்ணுமில்லியே?

ரா :—இல்லாபோனா என்ன? வட்டியும் மொதலுமா ஐநூத்திநாப்பது ரூபா ஆனத்துக்கு ஐநூறு ரூபாதானே கொடுத்தான். பாக்கி தள்ளிக்குடுத்தது அவன் ஒன்னெ நெருக்கமாட்டேன்னு சொன்னத்தின் பேரிலேதானே தள்ளிக்குடுத்தேன்.

சீ :—(வருத்தமாய்) இதெல்லாம் இப்போ சொன்னா யார் ஒப்புக்கொள்ளுவா, அத்திம்பேரே! நோட்டே மேடோவர் பண்ணரபோது எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நான் எங்கேயாவது பாத்து வாங்கிக்குடுத்திருக்கமாட்டேனா? கணக்குப்புள்ளெ சமாசாரம் ஒங்களுக்குத் தெரிஞ்சதுதானே, அடுத்துக் கெடுக்கரவன்னு.

ரா :—அடெ, அப்படி ஒரு மனுஷனெப் பத்தித் தீர்மானம் பண்ணிப்பிட முடியாதோ? ஏன், நீ பாகம் பண்ணிக்கர காலத்திலே அவன் ஒனக்கு வெல்லமா வழங்கினானே! (இதைக் கேட்டதும் சீதாராமன் அரைகுறையாய்க் காதில் விழும்படி "அவன் பேச்சையும் ஒம் பேச்சையும் கேட்டுத்தான் குட்டிச்செவராப் போனேன்" என்று சொல்லிக்கொள்ளுகிறான்) எனக்குப் போன வருஷம் பணத்துக்கு மொடெ சொல்லி முடியாது. ஒங்கண்ணா நோட்டுப் பொரந்து ஆறு வருஷம் ஆச்சு. ஒரு பைஸா வட்டி குடுக்கல்லெ. நீ நோட்டை ஒப்புக்கொண்டத்துக் கப்பரம் ரெண்டு ஸாலாச்சு. ஒன்னெச் சொல்லக் காரியமில்லெ, பிரிச்சுக்கிண்ட மொதல் வருஷம் சாவியாப் போச்சு, போன வருஷந்தான் செலவுமேலெ செலவா வந்துட்டுது ஒனக்கும் ஊர்ச்சண்டையிலே. எனக்கு வேறெ பணங்கிளம்ப வழியில்லெ. கணக்குப் புள்ளெ—அவ்வளவும் கெட்ட எண்ணம்னு அப்பரம்னா தெரிஞ்சுது!—விஜயவரம் கடத்தெருவிலே கண்டு, பேச்சு வாக்கிலே தங்கிட்டக் கொஞ்சம் பணம் வந்திருக்கு, ஏதாவது நல்ல புள்ளியாக் குடுத்தாத் தேவலேன்னான். அப்பொ நோட்டெ வானா மேடோவர் வாங்கிக்கரானான்னு கேட்டேன். 'ஆகா, அதுக்கென்ன, பேஷாச் செய்வோம், சீதாராமன்கிட்ட யிருக்கர பணம் நம்ம பொட்டியிலே இருக்காப்பிலேதான்'னு ரொம்ப ஸரளமாச் சொன்னான். நானும் நம்பிப்புட்டேன்.

சீ :—எல்லாத்துக்கும் எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். ஆரைச் சொல்லி என்ன உபயோகம்? அவனவனுக்கு வந்தத்தை அவனவன் அனுபவிச்சுத்தானே ஆகணும்! (வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது). சாஸ்திரிகள் வந்துட்டாப்லே யிருக்கு. (என்று சொல்லிக்கொண்டுபோய்க் கதவைத் திறக்கிறான். மேலே ஒரு ஷர்ட்டும் தலையில் கிருக்கு முண்டாசுமாய் ஒரு ஆசாமி நிற்கக் கண்டு வாசற்படியில் இறங்கி) யாரைப் பார்க்கிறீர்?

அ:—இதுதான் சீதாராமையர் வீடா? (அவன் கேட்டுக்கொண்டிருக்கும் போதே, அடுத்த வீட்டுத் திண்ணையில் பதுங்கி உட்கார்ந்திருந்த கணக்குப் பிள்ளையின் மூத்த மகன் பொசுக்கென்று வெளியே வந்து, சீதாராமனைச் சுட்டிக்காட்டி)

க-ம :—இவர்தான் பேர்வழி (என்று சொல்லித் தன் வீட்டைப் பார்க்க வேகமாய் நடக்கிறான். சீதாராமன் ஒன்றும் புரியாமல் நிற்கையில்)

அ:—ஐயர்வாள், வாரண்டு.

சீ :—(திடுக்கிட்டு) - ஆ, வாரண்டா? (அதற்குள் அமீனா அவன் உள்ளே போய் விடாதபடி வாசற்படியில் அவனுக்குப் பின்புறமாய் வந்து நின்றுகொண்டு சாவதானமாய்)

அ :—ஆமாம், வாரண்டுதான், பணத்தைக் காணத்யுங்க, இந்த ஊர்க் கணக்குப்பிள்ளைக்கு முள்ளிப்பள்ளம் ராமகிருஷ்ணய்யர் மேடோவர் பண்ணிக்கொடுத்திருக்கும் நோட்டின் முதல் வட்டிச் செலவு துகை உள்பட ரூ. 575க்கு 'அர்ரெஸ்ட் பிபோர் ஜட்ஜ்மெண்டு' (இதைக் கேட்டுக்கொண்டே வெளியே வந்த).

ரா :—'அர்ரெஸ்டா', இது என்ன சட்டமய்யா? இவருக்கென்ன போது மான சொத்தில்லியா? தவிர, கேஸுலே ரொம்ப சூது இருக்கு—.

அ :—அதெல்லாம் நமக்குத் தெரியுமா, ஸ்வாமி, சொல்லர எடத்திலே சொல்லிக்குங்கோ அந்தக் கக்ஷியெல்லாம். கோட்டுத் தொகை ரூ. 575, என்படி ரூ. 2½ இதைக் குடுத்துட்டா நான் வரவு வெச்சுண்டு போரேன், இல்லா போனா அய்யா எம்பின்னோடே திருவாரூர் வரவேண்டியதுதான். (இதைக் கேட்டதும் நிர்ஜீவனாய் சீதாராமன் திண்ணைத் தூணில் சாய்ந்து விடுகிறான்.)

ரா :—(நயமாய்) ஒம்மெப்பாத்தா நல்ல மனுஷனாத் தோணாது (என்று சொல்லிக்கொண்டே இடுப்பிலே யிருந்து ஒரு ரூபாய் பணத்தை யெடுத்து நீட்டி) இதை வெச்சுக்கிண்டு அசாமி ஊர்லே இல்லேன்னு யாதாஸ்து எழுதிண்டு போய்டும், ஒமக்கு ரொம்ப க்ஷேமம் உண்டாகும். இன்னிக்கி அவர் பண்ணர சடங்கு.

அ :—(வேகமாய்க் கையை ஆட்டி மறுத்து) அதெல்லாம்வேண்டாம்,சுவாமி, நான் விடமுடியாது, விட்டா நம்ம உத்தியோகத்துக்கு சடங்கு வந்துடும் (என்று சொல்லித் தான் விகடமாய்ப் பேசினதைத்தானே ஒப்புக்கொண்டவன் போல் சிரித்து) இந்த ஊர்க் கணக்குப்புள்ளெ சேதி தங்களுக்குத் தெரியாதுங்களா? ஒண்ணுக்குப் பத்தாக் கயறு திருச்சு நம்ம தலேக்குப் பாக்குவெச்சுப்புடுவாரு, நான் புள்ளெகுட்டிக்காரன், ஐயா.

ரா :—(ஒன்றும் புரியாதவராய்) அப்பொ என்ன பண்ணரது? (சீதாராமன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. அந்தச் சமயம் சீனிவாஸ சாஸ்திரிகள் அவஸர அவஸரமாய்த் தர்ப்பைக் கட்டுங் கையுமாய் ஓடி வருகிறார். வந்தவர் திண்ணையில் எல்லோரும் ஒருவிதமாய் இருந்ததைக் கண்டு சந்தேகத்துடனே, சற்றுத் தயங்கினாற்போல்)

சீனி:—(ராமகிருஷ்ணய்யரைப் பார்த்து) மாப்பிள்ளை, எப்பொ வந்தேள்?

ரா :—காலமேதான் (ஏதோ யோசனை தோன்றினாற்போல்) சாஸ்திரிகளே, இப்படி வாரும் (என்று சொல்லி, ஒதுப்புறமாய் அழைத்துப் போய், குசுகுசு வென்று) 'கலெக்டர்' ஆக்கு வெங்குகிட்டே பணம் ஆப்படுமோ?

சீனி :—அவர் கிட்டெ இல்லாமெ என்ன, சொப்பனத்திலே கேட்டாக்கூட ரூ 2000 இல்லெ, வேணும்னு கிளம்பாதா? ஆமாம், என்ன தகவல்? சீதாராமன் என்னவோபோலே யிருக்கானே?

ரா :—ஒண்ணுமில்லெ, ஒங்க ஊர் கணக்குப்புள்ளெ பண்ணின வேலே, சொல்பத் தொகை ஐநூத்திச் சொச்ச ரூபாய்க்காக வாரண்டிலே பிடிச்சுட்டான் சீதாராமனை.

சீனி :—அட பாபமே, அவன் கொலெ பாதகன்னா, அவன்கிட்ட மாட்டிக்கலாமா? ஆமாம், இப்பொ என்ன பண்ணரது, பெரியவா காரியம் நடக்கணுமே!

ரா :—அதான் யோசிக்கரேன், ஒண்ணும் புரியல்லெ. எல்லாத்துக்கும் ஒரு காரியம் பண்ணுமேன். ஒமக்குத்தான் வெங்குவெ நல்ல பழக்கமுண்டே, சட்டுன்னு போய் விஷயத்தைச் சொல்லி ரூ 600 இந்த சமயம் கொடுத்தா ரொம்ப ஒத்தாசையாயிருக்கும்னு கேட்டுப்பாருமேன்.

சீனி :—அதுக்கென்ன, இதோ போறேன், (என்று மேற்கே பார்க்க ஓடுகிறார். பாக்கிப் பேர்கள் ஈப்பாக்கு வைத்தாப்போல் உட்கார்ந்திருக்கிறார்கள். பட்டம்மாள் வாசலில் பேச்சுக் குரல் கேட்டு வெளியே வருகிறாள். அவளைக் கண்டதும் சீதாராமன் வெகு சலிப்பாய்)

சீ :—இங்கே என்ன காரியம்? இன்னிக்கி சிராத்தம் கீத்தம் ஒண்ணும் நடக்கப் போரதில்லெ. போய் வடை அதிரஸம் வயர் நரயச்சாப்பிடலாம். (ராமகிருஷ்ணய்யர் அவனை முதுகில் மெதுவாய்த் தட்டி)

ரா :—படபடக்காதே, என்ன வந்துட்டுது இப்போ! சாஸ்திரிகளை வெங்கு வாத்துக்குப் போகச்சொல்லியிருக்கேன்.

சீ :—வெங்கு என்ன எனக்குச் சித்தப்பா புள்ளேயோ, மூட்டையை அவுத்துக் குடுக்கரத்துக்கு? (பட்டம்மாள் ஒன்றும் புரியாதவளாய் யாரைக் கேட்பது என்று யோசித்துத் தான் நாத்தனுர் புருஷனுடன் ஜாடைமாடையாய்ப் பேசுபவளாதலால் அவரை ரேழியில்நின்று ஜாடையாய்க் கூப்பிட்டு)

ப :—என்ன சமாசாரம், ஒண்ணும் புரியல்லியே?

ரா :—அந்தக்' காலாடி கணக்குப் புள்ளெ யிருக்கானேல்லியோ, அவன் நோட்டெப் பிராது பண்ணி வாரண்டு கொணந்துட்டான்.

ப :—அய்யோ, வாரண்டா? அப்போவே அடிச்சுகிண்டேனே நான், ஊராரிண்டே நம்பளுக்குப் பகை வாண்டாம்னு! போன வருஷம் அனுவசியமா இந்தக் கோவில் சண்டைலே போய்த் தலையிட்டுண்ட போதே தெரியும், எனக்கு இது ஏதோ ஆவத்துக்குத்தான்னு. கோவில் குத்தகையைத் தன்னிண்டேயிருந்து நீக்கிப்பிட்டாளுன்னு அந்தக் கழிச்சல்லே போரவன் கெருவிக்கிண்டிருந்தாப்பிலேருக்கு, என் தலேலே கல்லெத் தூக்கிப் போட்டுட்டானே! (என்று அழ ஆரம்பிக்கிருள். அந்தச் சமயம் சாஸ்திரிகள் வருகிறுர். போன வேகம் இல்லே, முகம் சற்று வாட்டமாயிருக்கிறது. அவரைக் கண்டதும் ராமகிருஷ்ணய்யர் விரைந்து எதிர்கொண்டு)

ரா :—காயா, பழமா?

சீனி :—இப்படியுஞ் சொல்லரத்துக்கில்லெ, அப்படியுஞ் சொல்லரத்துக்கில்லே. அவர் யாராவது தகுந்த பேர் வழி மேலொப்பம் போட்டாத் தரேங்கருர்.

ரா :—சீதாராமன், என்னங்கணும், பொராக்குடியா? வேணுமானு ஒரு பெந்தகம் வாங்கிக்கட்டுமே.

சீனி :—அடடா, அவர் சமாசாரம் ஒங்களுக்குத் தெரியாதோ? பந்தகங் கிந்தகமுன்னு வம்பு வழக்கெல்லாம் வெச்சுகரதேயில்லெ. ஒண்ணு, நோட்டும் பேரிலே, இல்லே, அயனை தங்க எனத்தின் பேரிலே, வேறெ வியவஹாரமே கடையாது. வட்டியும் ரெண்டு வட்டி தான்.

ரா :—அப்பொ, அவனைத்தான் கேக்கணும். சீதாராமா! (என்று கூப்பிடுகிறுர். அவன் இருந்த இடத்திலிருந்தபடியே—நகர்ந்தால் அமீனு என்ன சொல்லுவானே என்ற பயம்—)

சீ :—என்ன சமாசாரம்? (இருவரும் அவன் கிட்ட வந்து)

ரா :—வெங்கு யாராவது மேலொப்பம் போட்டாத் தருவேங்கிறுனும். இல்லா போனு ஏதாவது தங்க எனமாயிருந்தாலும் கிடைக்கும்.

சீ :—மேலொப்பம் போடரத்துக்கு நான் யாரைப் போய்த் தேடரது?

ரா :—(கொஞ்சம் பயந்துகொண்டே) ஒங்க அண்ணுவெ.

சீ :—(வெகு அழுத்தமாய்) பயித்தியமா புடிச்சிருக்கு எனக்கு? தலேபோனுலும் நான் போய்க் கேக்கமாட்டேன் அவனே. வருஷம் ரெண்டாச்சு அவன் என்னேடே பேசி.

சீனி :—ஆமாம். அவரும் ரோஸக்காரர்தான். எனக்கு ஒரு யோசனை தோன்றது, சொல்லலாமா?

ரா :—குசாலாச் சொல்லுமேன், ஏதாவது வழி பண்ணியாகணுமோல்லியோ?

சீனி :—ஏன், நீங்களே ஒரு கையெழுத்துப் போடலாம். அதைக்கூட வெங்குவையரைக் கேட்டேன். 'ஓ, பேஷாப் போரும், ராமகிருஷ்ணய்யரை விட பெரிய ஜாமீன் நமக்கெதுக்கு?'ன்னுர். (சீதாராமன் ஒன்றும் சொல்லாமல் ராமகிருஷ்ணயரைப் பார்க்கிறுன்).

ரா :—(ரொம்ப கோபமாய்) நல்ல யோஜனே சொன்னீரே, சாஸ்திரிகளே! ஊர் வம்புக்கெல்லாம் நான்தானு ஆளு? போரும் போரும், ஏதோ இத்தனை நாளா மானமாக் காலந் தள்ளியாச்சு, அம்பது வயசுக்கு மேலே கையெழுத்துங் காலெழுத்தும் போட்டு மாட்டிக்கிண்டு சங்கடப்பட முடியாது.

சீ :—(சிரித்துக்கொண்டு) பயப்படாதேயுங்கோ, அத்திம்பேரே, கையெழுத்துன்னு சொன்னுப் புடிச்சுண்டுடாது,

ஒங்களெப் போடக்கிடச் சொல்லலெலே! (இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது காமாக்ஷி வருகிறாள். வாசலில் புருஷர்கள் நிற்பதையும் ரேழியில் பட்டம்மாள் மலங்க மலங்க முழித்துக் கொண்டிருப்பதையும் கண்டு அவளிடம்போய்)

கா :—என்னடி, எல்லாருமா நிக்க ராளே? யாரு அந்த ஆள்?

ப :—அந்தக் கணக்குப்புள்ளே கட்டேலே போரவன் அரணூறு ரூபாய்க்கு வாரண்டு விட்டுட்டான். கலெக்டராத்துப் புள்ளெயெப்போய்ப் பணம் கேட்டாப்பிலேருக்கு; அவர் முடியாதுன்னுட்டாப்போலே தோணரது, சாஸ்திரிகள் வெறுங்கையா வந்துட்டார்.

கா :—அய்யோ, அதான் ஒங்க மச்சினன், 'என்ன அவாத்து வாசல்லே கூட்டமாயிருக்கு, சாஸ்திரிகள் கெழக்கே மேற்கே ஓடறாரே'ன்னார். பார்த்துட்டு வரேன்னுட்டு வந்தேன்—அப்பொ, இப்பொ என்ன வழி?

ப :—நான் வழியெ என்னத்தைக் கண்டேன்? அக்கா! எதாவது ஒரு எனத்தெ அடகுவெச்சுப் பணம் வாங்கிக் குடுக்கலாம்னு எங்கிட்ட என்ன யிருக்கு? காதிலே கழுத்திலேயிருக்கரதெல்லாம் வித்துத்தான் போன வருஷம் ஊருக்கு எழவெடுத்தாச்சு, வாண்டாம் வாண்டாம்னு முட்டிக்கரத்தே!

கா :—அதைச்சொல்லி இப்பொ என்னப் பிரயோசனம்? சாஸ்திரிகளே!

சீனி :—அம்மா!

கா :—(அவரைத் தனியாய் அழைத்து மெதுவான குறலில் என்ன நடந்தது என்று விசாரித்துத் தெரிந்து கொண்டு, உரக்க) சித்தெ ஆத்துக்குப்போய், இங்கே அவஸரமா ஒரு காரியம், கையோடெ கூப்பிட்டு வரச்சொன்னேன்னு அவரெக் கூப்பிட்டிண்டு வாருங்களேன். (சாஸ்திரிகள் ஓடுகிறார்.)

ப:—அவரெங்கே வரப் போரார்! இந்தக் குத்துச்செங்கல்லெ அடிவைக்க வேல்லியே அவர்!

கா :—ராமய்யன் கும்பலுக்கு தீர்க்க வைஷமியத்துக் கொண்ணும் கொறச்சலில்லெ. ஒன்னும்படையான் என்ன கொறைச்சலோ?

ப :—கொறைச்சல்னு யார் சொல்றா, அக்கா? அத்திம்பேர்கூட அண்ணாவெப் போய்க் கேளேன்னு சொன்னாப்பிலே ருக்கு. கேக்கமாட்டேன்னுட்டுது.

கா:—(உரக்க, ராமகிருஷ்ணய்யர் காதில் விழ) ஏன், அண்ணாவெக் கேளும்பானேன்? அத்திம்பேர் வாங்கிக் குடுக்கப்படாதோ? அதுக்கு சுவாதீனமில்லியோ, அரை நொடியிலே சட்டி வேறெ வெக்கிரத்துக்கு மட்டும் ரொம்ப சுவாதீனமா ஏற்பட்டாரே!

ரா :—(உதாத்தமாய்) ஊரார் பேச்செல்லாம் அனுவசியமா இழுப்பானே? அத்திம்பேர் நீட்டின எடத்திலேல்லாம் கையெழுத்துப் போடரத்துக்கு மூட்டெ மூட்டெயாப் பணத்தைக் கட்டிவெச்சுண்டாயிருக்கார், நாளைக்கி இதெப் போலெ வாரண்டு வந்தாக் குடுக்கரத்துக்கு? (அவருக்கிருக்கும் வேகத்தில் பின்னாலே வரும் நீலகண்டையரைக் கவனிக்கவில்லை.)

நீ :—அடடா, மாப்பிள்ளே! என்ன இவ்வளவு கோபம்?

ரா :—(திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, பல்லைக் காட்டிக்கொண்டு)—நீலகண்டா! வா. ஒண்ணுமில்லெ, பொம்மனாட்டிகள் ஏதோ சொன்னா—

நீ:—ஸரி, அதைப்பத்தி ஸாவகாசமா அப்பரம் பேசிப்போம்; என்னை ஆரு கூப்பிட்டா?

கா:—நான்தான். இப்படி வாருங்கோ.

நீ :—சொல்ரத்தெச் சொல்லு, இங்கேயிருந்தே காதுகேக்கரது எனக்கு.

கா :—இப்பொ ரூபா 600 வேணும். அதுக்கு வழி பண்ணுங்கோ.

நீ :—உத்தரவு பலமாயிருக்கே! எங்கேயாவது தீவட்டிக் கொள்ளையடிக்க வேண்டியதுதான்.

கா :—ஒரு கொள்ளையும் அடிக்க வாண்டாம். கலெக்டராத்திலே கொடுக்கரேங்கறாளாம், யாராவது மேலொப்பம் போட்டா.

ரா :—ஆமாம், அப்பா, ஒனக்குக் கொடுக்காததுக்கென்ன ? தாராளமாக் கொடுப்பா.

நீ :—மாப்பிள்ளே, ஒம்ம சிபார்சு வாண்டாங்கறும் எனக்கு ! அவனே வட்டி வாங்கரவனிண்டே பல்லெக்காட்டர கெதி வந்துடல்லே எனக்கு.

சீ :—ஒத்தருக்கும் யெங்கெதி வர வாண்டாம். எம் பாவம் என்னோடே போகட்டும். (அமீனவைப் பார்த்து) ஐயா, பணங்கட்ட முடியாது. கோர்ட்டிலே ஆஜராக வேண்டியதுதான். (என்று சொல்லும்போதே சீதாராமனுக்குக் கண்ணி லிருந்து ஜலம் கடகடவென்று வழிகிறது. இதைப் பார்த்ததும் காமாக்ஷி சகிக்காத வளாய்த் தன் கழுத்திலிருந்த நாலுவடக் கடியாரச் சங்கிலியைக் கழற்றிக்கொண்டு)

கா :—சாஸ்திரிகளே ! இந்தாரும், இந்த நகையெக்கொண்டே வெச்சு பணத்தெ வாங்கிண்டு வந்து குடுத்து அந்த மனுஷனைப் போகச்சொல்லும். அது 30 பவுன். (சாஸ்திரிகள் நீலகண் டையரைப் பார்க்கிருர். அவர் கைஜாடை யால் அவரைத் தடுத்துவிட்டு, அகமுடை யாளைப் பார்த்து)

நீ :—எல்லாம் ஒன் நாட்டமேதான் போலேருக்கு ? பணம் வேணும்னு என க்கு வாங்கரத்துக்குத் தெரியாது, நீ எனக்குப் புத்திசொல்ல வந்துட்டியோ? (ராமகிருஷ்ணய்யரைப்பார்த்து) எங்கறும்? நான் ஒத்தன் ஊர்லெ இருக்கரபோது எங்காதிலே ஒரு வார்த்தை போடாமே, அவனையும் இவனையும் போய் எதுக்குங் கனும் கேக்கனும் ?

ரா :—அய்யோ, அதைத்தான் நானுந் சொன்னேன், அதுக்கு எம் பேர்லெ எறிஞ்சு விழுந்தான்.

நீ :—காரணமிருக்கக் கொண்டுதான் விழுந்தான். அசல் வாழ்ந்தா அஞ்சுநாப் பட்டினீம்பா, நீரும் ஒம்ம ஆம்படையா என் அருமைத் தங்கையும் அஞ்சு வரு ஷம்னு பட்டினி கெடப்பேள்! அரை நாழிப் போதுலே கலெச்சுப்புட்டேளே இந்த அடிமுட்டாளே. பாகம் பண்ணிக் கிண்டானே ஒத்தக்கால்லெ நின்னு, ஏன்ன நெலைமையாச்சு பார்த்தீரா ?

சீ :—எரியர புண்ணுலே தீயெவெச் சாங்கராப்பிலே இப்பொ இதெச்சொல் லிக் காட்டரத்துக்கு வருவானேன் ?

நீ :—சொல்லிக்காட்ட வரல்லேடா, ஒனக்கு யாரெ நம்பரது, யாரெ நம்பப் படாதுன்னு புத்தி வரட்டும்னுதான் சொன்னேன். (இடுப்பிலிருக்கும் திறவு கோல் கொத்தை எடுத்துத் தன் அகமுடை யாள் பக்கம் எறிந்து) இந்தாடி, பீரோ விலே கைப்பெட்டியிலே நேத்திக்கி நெல்லு வியாபாரி கொண்டுவந்து குடு த்த பணம் வெச்சிருக்கேன். அதிலே ரூபா 600 எடுத்துண்டு வா. (காமாக்ஷி திறவுகோலே எடுத்துக்கொண்டு வேகமாய் வீட்டுக்குப் போகிருள். சீதாராமனுக்கு நல்ல பிரச்னை வருகிறது. அமீன பணம் வருவது நிச்சயம் என்று தெரிந்து கொண்டு சீதாராமனைப் பார்த்து)

அ :—ஐயா, நம்மபேர்லே வருத்தப் படாதேயுங்க, நம்ம 'டுடி'யெ செய் ரோம்.

நீ :—என்னப்பா, அமீன, 'அர் ரெஸ்டு பிபோர் ஜட்ஜ்மெண்டு' உத் தரவு பண்ணரத்துக்கு என்ன செலவு கணக்குப்புள்ளெய்க்கி ?

அ :—(வினயமாய்) அதெல்லாம் நமக்குத் தெரியுங்களா ? குமாஸ்தாவுங் களுக்கு எதாவது கனத்திருந்தான் இருப் பாரு. (காமாக்ஷி பணத்தைக் கொண்டு வந்து வைக்கிருள்.)

நீ :—என்னப்பா கணக்காகிறது ?

அ :—(கடிதத்தை நீட்டிக்கொண்டு) ரூ. 575 ; படி ரூ. 2-8-0. ஆக ரூ. 577-8-0 ங்க.

நீ :—(பணத்தை எண்ணிக்கொடுக்க அவன் வரவு வைத்து, ராமகிருஷ்ணய்யரும் சாஸ்திரிகளும் சாக்ஷிபோடுகிருர்கள். அமீன நீலகண்டையருக்குப் பெரிய கும்பிடு போடுகிருன்.) என், பணம் வந்துட் டுதோல்லியோ? நடையைக் கட்டு. கணக் குப்புள்ளேண்டேன்னு போகனும் காப்பிச் செலவுக்கு ? ஆச்சு, கூடிய சீக்கி ரத்திலே வெருப்பேர் அவன் கணக் கிலே காப்பி சாப்பிடும்படியா வெக் கிறேன். (அமீன கிழக்கே போகிருன். நீல கண்டையர் மேற்கே போகிருர். போகுப்

'சிவப்பு எண்ணெய்'ப் பனை

ஆப்பிரிக்காவில் ஒருவித எண்ணெய்ப் பனைமரத்தை வைத்துப் பயிர் பண்ணுகிறார்கள். அதற்குச் சிவப்பு எண்ணெய்ப் பனை யென்றும், நைஜீரிய எண்ணெய்ப் பனை யென்றும் பெயர்களுண்டு. அப் பனம்பழத்தின் சதைப் பாகத்திலிருந்து ஒருவித எண்ணெயை இறக்குகிறார்கள். அந்த எண்ணெயில் வைடமின் 'ஏ' இருக்கிறதென்றும், மீன் கொழுப்பெண்ணெய்க்குள்ள குணம் பூராவும் அதற்கும் உண்டென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சமீபத்தில் இம்மரங்கள் மலேயாவில் ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டது. பம்பாய், பரோடா, இலங்கை முதலிய இடங்களிலும் இதை வைத்துப் பயிரிட முயற்சி செய்யப்பட்டு அதில் வெற்றியடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. வைடமின் 'ஏ' நிறைய உள்ள எண்ணெய்களிலேயே நைஜீரியப் பனை எண்ணெய்தான் மிகவும் மலிவு என்றும், இப்பனைகளைப் பயிர் செய்வது மிகவும் எளிதென்றும் தெரிகிறது.

இப்பனை எண்ணெயின் மதிப்பு நம்மவரில் பலருக்கு அதிகம் தெரியாததால், இதைப் பயிர் செய்வதற்கும் நம் நாட்டில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. நம் நாட்டில் இம்மரம் நன்றாக வளரும். திருவாங்கூரில் சில இடங்களில் மட்டும் 200 மரங்கள் பயிர் செய்யப்படுகின்றன.

நம் நாட்டுப் பனம்பழத்தைப்போலத் தான் இம்மரத்தின் பழமும் இருக்கும். வெகு காலமாக இப்பழத்தினுடைய வித்தின் உட்புறத்திலிருக்கும் பருப்பிலிருந்துதான் எண்ணெய் எடுத்து வந்தார்கள். சமீபத்தில்தான் இப்பழத்தின் சதைப் பாகத்தில் 40-லிருந்து 50 சதவிகிதம் வரை வைடமின் 'ஏ' நிறைந்த எண்ணெய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இப்பழத்தை நைஜீரியாவிலுள்ளவர்கள் உண்பதும் உண்டு.

நாம் தினசரி உண்ணும் உணவில் வைடமின் 'ஏ' குறைவாக இருக்கிறது. இக்குறைவை ஈடுசெய்ய இப்பழத்தில் ஒன்றைத் தினசரி நாம் உணவு உட்கொள்ளும்பொழுது சாப்பிட்டால் போதுமானது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஒரு நல்ல முதிர்ச்சி பெற்ற பழத்திலிருந்து 2 அல்லது 3 கிராம் எண்ணெய் இறக்கலாம். இந்த எண்ணெயில் 3000 சர்வதேச யூனிட் வரை வைடமின் 'ஏ' சத்து இருக்கிறதென்று கூறப்படுகிறது. இந்த அளவு வைடமின் மீன்கொழுப்பு எண்ணெயில் மட்டுந்தான் இருக்கிறதென்று முன்பே கூறினோம். நம்மவர்களுள் பலர் மீன் கொழுப்பெண்ணெயை உட்கொள்வதை ஆட்சேபிப்பார்கள். அவர்களெல்லோரும் இப்பனை எண்ணெயைத் தாராளமாக உட்கொள்ளலாம்.

இதை அபிவிருத்தி செய்வதற்குத் திருவாங்கூர் சர்க்கார் முயற்சியெடுத்து வருவது பாராட்டத் தக்கதே.

போதே திரும்பிப் பார்த்துக்கொண்டு அகமுடையாளை அதட்டி)

நீ :—பிராம்மணா பட்டினி கடக்கா, கச்சேரிக்கி ஒக்காந்துடவாண்டாம் (என்று சொல்லிப் போகிறார்.)

கா :—ஆமா, தினம் கச்சேரிதான் பண்ணிண்டிருக்கேன், என்னைச் சொல்லாபோனாப் போது போகாது. (ஓர்ப்படியைப் பார்த்து) அடியெரங்கப் போராது. போ, போ, சுருக்குப்பண்ணு. அவர் எளம்பசிக்காரர். அதுவும் இன்னிக்கி நடந்திருக்கர கூத்துக்கு ஆறு மாசத்துச் சாப்பாடு சாப்பிட்டிருந்தாக் கூட எல்லாம் ஜலமாய்ப் போயிருக்கும்! (வீட்டுக்குப் போகிறாள். பாக்கிப் பேர்கள் உள்ளே போகிறார்கள்.)

(திரை) —— (முற்றிற்று.)

(இந்த நாடகத்தின் நடிப்பு முதலிய சகல உரிமைகளும் ஆசிரியருக்குச் சொந்தம்)

மௌனப் பணி

[டாக்டர் டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ.]

கணேச சாஸ்திரி ஓர் ஆங்கிலம் படித்த பட்டதாரி. நகர வாசத்தில் சுமார் இருபது வருடங்களைக் கழித்து அரசியல், பொருளாதாரம், கூட்டுறவு முதலிய இயக்கங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தவர். தேசபக்தரும் கூட. நாளை விசாரம் நாளைக்கென்று தைரியமாய் வருவாயை அன்றன்றே செலவழித்துக் குடும்பத்தை நடத்துகிறவர். எல்லோரிடமும் எளிதில் பழகக் கூடியவர். சுயேச்சையாகவே தொழில் செய்வதிலுள்ள ஆர்வம் பெரிய உத்தியோகங்களைத் தேடாமலிருக்கத் தைரியம் கொடுத்தது. கீதையின் தத்துவத்தைக் கடைப்பிடித்துக் கர்மயோகியாகவே தொழில் புரிந்தும், ஏதோ ஒருகுறை இருப்பதாகவே இவர் மனத்திற்குத் தோன்றியது. பல வருஷ காலம் யோசனை செய்ததில் நகர வாசம் உண்மைத் தொண்டை மறைக்கும் மாயை என்று ஏற்பட்டது.

லோகத்தின் பெற்றோர்களாகிய பார்வதியும் பரமசிவனும் ஒரு கனியை வைத்துக்கொண்டு தங்கள் இரு குழந்தைகளாகிய சுப்பிரமணியத்தையும் கணபதியையும் பார்த்து இந்த உலகங்களையெல்லாம் சுற்றி முதலில் வந்து கேட்கிறவனுக்கு 'இந்தக் கனி' என்றனர். உடனே மயில்வாகனமேறி உலக யாத்திரைபுறப்பட்டார் சுப்பிரமணியம். கணபதியோ நிதானமாகத் தந்தைமடியிலிருந்து இறங்கித் தாய் தந்தையர்களை ஒரு வலம் வந்து கனியை வாங்கிச் சாப்பிட்டார். இக்கதையின் தத்துவம் கணேச சாஸ்திரிகளை 'உண்மைச்சேவை கிராமத்திலேயே' என்ற முடிவிற்கு வரச் செய்தது.

நகரத்தில் உழன்று செய்யும் சேவைக்கு எல்லையில்லை. சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாகத் தான் பரிணமிக்கும். விசுவரூபத்தைப் பார்க்க முயல்வதுபோல்தான்! எந்த ஒரு அம்சத்தையும் பூர்ணமாகச் செய்ய இடம் பொருள் ஏவல் காலம் முதலியவை போதாமல் ஆகிவிடும். ஆகவே எல்லாவற்றிற்கும் ஆதிவஸ்துவும் ரக்ஷகர்களுமாகிய ஈச்வர தம்பதிகளைப்போல், இவ்வுலகத்து நகரங்களுக்கெல்லாம் ஆதாரமாகவும் நகரசேவைக்கெல்லாம் வித்தாகவும் விளங்குகின்ற கிராம ஸேவைதான் தம் சக்திக்கு உட்பட்டதாய், நிம்மதியையும் பூர்ண திருப்தியையும் தருமென்று தேர்ந்தார்.

இந்த முடிவை அமுலுக்குக் கொண்டு வர வெகு பாடுபட்டார். கிரகஸ்த தருமத்தைக் கைவிடாமல் நகரவாசத்தை மட்டும் துறப்பது எவ்வளவு சங்கடங்கள் பயக்குமென்று ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுத இச்சாஸ்திரிகளின் அனுபவம் மிக்க பயன்படும். ஆயினும் மனம் சோராமல் சிறுகச் சிறுக எல்லோரையும் கிராமத்திற்குப் போகும் மனப்பான்மைக்குக் கொண்டு வந்தது முயற்சியின் பலனென்று சந்தோஷமடைந்தார். காலக்ஷேபத்திற்கு விளைச்சலைத் தாப் போதுமான சிறிது பூஸ்திதியும், உண்மையுடன் உழைக்கக் கூடிய ஒரு 'குடியானவக் குடும்ப'மும் தலையூரில் இவருக்குஉற்ற துணைவர்கள்.

கிராமத்தை அடைந்த முதல்இரண்டு வாரங்கள், உபசாரம் விருந்து முதலிய விமரிசைகளில் கழிந்தன. உள்ளூருக்குப் பல வருஷங்களுக்குப் பிறகு படித்த நகரவாசி, தேர்ந்த தொழிலாளி,—யார் கண்டார், ஒரு கால் முதலாளியாகவுமிருக்கலாம்—என்ற எண்ணம் இவ்வித வரவேற்புக்குக் காரணம் போலும்!

இந்த அமளிகள் ஓய்ந்து இப்பொழுது பல தினங்களாகி விட்டன.

சாஸ்திரிகளுக்கு நிம்மதி ஏற்படவில்லை. குக்கிராமத்திலுள்ள நாலைந்து வீதிகளையும் கால் மணியில் சுற்றிவந்து தன் கூரைக் குடிசையில் நுழைந்து சக தர்மிணியுடன் அடுப்பங்கரையில் மகாநாடு நடத்துவது ஒரு நாளையில் எத்தனை தடவைதான் மனத்திற்குத் திருப்தி தரும்! வயல்களுக்குச் சென்று சுற்றிப் பார்க்கலாமென்றால் அந்தப் பொட்டல் - காடு இவர் மனத்திற்குக் குதூகலத்தைத் தருவதற்காகத் தன்னுள் பதுங்கி யிருக்கும் விதைகளை அலங்கரித்துப் பசுமையான பயிர்களாக நிறுத்திவைக்க அவசரப்படுவதாகத் தெரியவில்லை. எங்காவது போய் நிம்மதியாக அரட்டையடித்துவிட்டுப் பொழுதிறங்க வீட்டிற்கு வரலாமென்றால், இவர் பேசுவதைக் கேட்டு 'சபாஷ்' சொல்ல யோக்கியதையுள்ளவர்களோ, அல்லது பதில் சம்பாஷணை தொடங்கக் கூடியவர்களோ இல்லை.

பக்கத்தூருக்காவது போய் வரலாமென்றால், தாலுகாத் தலை நகரந்தான் சமீபத்தில் மூன்று மைலில் உள்ளது. அங்கும் 'தலைவிதியே!' என்று சில நாட்கள் சென்று பார்த்தார். அங்குள்ளவர்கள் மரியாதைக்குச் சிறிது நேரம் சம்பாஷித்தாலும் அவர்கள் நடந்துகொள்ளும் தோரணை, மிக்கஏமாற்றத்தை விளைவிப்பதாக இருக்கிறதென்று சாஸ்திரிகளே சொல்லுவார். மாகாணத்தின் தலைநகரில் பல பெயர்களிடம் மிக்க கௌரவத்துடன் பழகிய ஒருவர் உயர்ந்த நோக்கத்துடன் குக்கிராமத்தில் குடியேறினால் கிராமம் செய்த அதிர்ஷ்டம், தாலுகா செய்த பாக்கியம்—என்று ஜனங்கள் எண்ணுவார்களென்று சாஸ்திரிகள் மனோராஜ்யம் செய்திருக்கலாம். ஆனால் தாலுகாத் தலைநகரத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த பெரிய மனிதர்களா அதற்குப் பொறுப்பு? அவர்களுக்கு முக்கியமான எவ்வளவோ அலுவல்கள் இருக்கையில், இந்தப் பைத்தியக்கார சாஸ்திரிகளின் வேதாந்தத்தையும் கிராம ஸேவையையும் கேட்க நேரமேது? அவர்களெல்லாம் கிராமங்களின் சமீபத்திலுள்ள நகரவாசிகள். வெகு காலம் பழந்தின்று கொட்டை போட்டவர்கள். அவர்களாலேயே சீர்திருத்த முடியாத இக்கிராமங்களை இந்தச் சாஸ்திரிகள்தானா கடைத்தேறச் செய்யப் போகிறார்?

"கிராமத்தார்களெல்லாம் சோம்பேறிகள்; சுயநலமிகள்; பொய் புகலுவதே தொழிலாகவுடையவர்கள். இவர்களிடம் ஐயோ பாவமென்றால் ஆறு மாதங்களுக்கு நரகம் கிட்டும்! பார்த்தும் பார்த்தும் இந்தத் தாலுகாவிற்கும் இந்தக் கிராமத்திற்குந் தானா வரவேணும்? இவர் படித்தென்ன, தொழிலில் தேர்ந்தென்ன? மாகாணத் தலைநகரில் வாழ்ந்து கண்ட பலன் தானென்ன? தலைவிதி: ஏதோ நாவல்களைப் படித்துவிட்டுப் பிரமைதட்டியதுபோலும்! அதிகப்படிப் பால் வந்த வினை. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?"" என்று இந்த ஜனங்கள் நினைப்பதை சாஸ்திரிகள் அறியாமலில்லை. அவரும் "ஒருத்தர் போன வழியே போகும் ஜனங்கள்; கிணற்றுத் தவளைகள்! இவர்களை நொந்து பயனில்லை. காரியத்தைச் சாதித்துக் காட்டினால் பின்பற்றுவார்கள். காரிய சித்திக்கு இவர்கள் புகழ் தேவையில்லை. தபஸ் வேண்டும். திடசித்தம் வேண்டும். நிஷ்காமிய கர்மத்தின் ஆற்றல் குன்றக் கூடாது" என்று தீர்மானித்து நகரத்தாருடன் வீண் வம்பளக்கப் போவதை அறவே ஒழித்தார்.

தம் முழுக் காலத்தையும் கிராமத்திலேயே செலவழிக்க முயன்றார். வேலையொன்றுமில்லாவிட்டால் தம் சங்கல்பத்தைக் குறித்துத் தியானத்தில் அமர்வார். கிராம ஜனங்களிடம்கூடத் தம் திட்டங்களைப்பற்றிச் சர்ச்சை செய்வதினின்றும் விலகினார். ஸ்தாவரங்களும் விலங்குகளும், "பேசிப் பயனில்லை; செய்து காட்டு" என்று புத்தி போதிப்பதை உணர்ந்தார். வாழ்க்கைக்கு வழி சொல்லுவதைவிட வழிகாட்டி

யாக இருப்பதே பயன் தருமென்று உணர்ந்தார். திருப்தியுடன் கண்ணும் கருத்துமாகத் தம் சிறு பூஸ்திதியில் பாடுபட்டு ஆரோக்கியமும் உத்ஸாகமும் நிறைந்த வாழ்க்கை நடத்த முயன்றார். இவர் செல்வம் செழிக்க செழிக்கச் செல்வாக்கும் பெருகியது.

நகர மாயையிலிருந்து விடுபட்ட கணேச சாஸ்திரிகள் வாழ்க்கையில்புதிய உண்மைகளை யறிந்தார். காபி ஹோட்டல்களும் சினிமாக்களும் இல்லாமலேயே ஜீவித்திருக்க முடியும் என்று தெரிந்து கொண்டார். வீட்டில் தயாரிக்கப்படும் காபியோ, டீயோ, மோரோ, கஞ்சியோ அல்லது கரைத்த சத்துமாவோ வேளா வேளைக்குக் கிடைத்தால் மனத்திற்கு உத்ஸாகம் குறையாது என்று அனுபவத்தில் அறிந்தார். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு காய் கறிகளைச் சமைத்து உண்ணுகிற மாதிரி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பானங்களை யருந்திச் சில நாட்கள் காய் கறிகளை நீக்கிச் சாப்பிடுவதைப் போலவே சில நாளைக்கு யாதொரு பானத்தையும் அருந்தாமல் பழக்கத்திற்குக் கொண்டு வந்து வெற்றியும் பெற்றுவிட்டார். காபியைப் பகிஷ்காரம் செய்யவில்லை. ஆனால் அதற்கு அடிமையும் ஆகவில்லை. சினிமாக்களில் வெறுப்பில்லை. ஆனால் தேடித் தேடி எங்கும் நிலையிலிருந்து தப்பிக் கொண்டார். தெருக் கூத்தும் பார்க்க அருகதையுள்ள கலை என்று அறிந்தார். பொழுது போக்க ஸத்கதா காலக்ஷேபமும் பஜனைகளும்கூட உதவும் என்ற உண்மையை ஓர்ந்தார்.

இத்துடன்மட்டும் நிற்கவில்லை. கையிலிருந்த நாவல்களும் புஸ்தகங்களும் படித்து முடிந்தவுடன் புஸ்தகசாலையிருக்கிறதா என்று பழக்கம் காரணமாகச் சிறிது காலம் தேடி அலைந்து ஏமாற்ற மடைந்து தற்பொழுது இயற்கையின் புத்தகங்களைப்படிக்கப்பயின்று விட்டார். நிலங்களும், எழுத்தறிவற்ற ஏழைக் குடியானவர்களும் பெரும் புத்தகங்களாகமாறினார்கள். சமாசாரப் பத்திரிகையின் முகத்திலேயே பிரதி காலையும் விழிக்கும் பழக்கம் மாறிக் கிராமத்தில் இவர் தோட்டந் துரவுகளைக் காலையில் சுற்றிப் பார்ப்பது சகஜமாகிவிட்டது. அவைகளில் எந்த மரம் காய்த்திருக்கிறது, எந்தக் கொடி பூத்திருக்கிறது, என்பது ராய்ட்டர் தந்திகளைவிட முக்கியமாய் உத்ஸாகமூட்டக் கூடியவைகளாகிவிட்டன. இதனால் பத்திரிகையைப் பகிஷ்கரிக்கவில்லை. அதைச் சாவகாசமாகப் படித்துச் சாராம்சத்தைக் கிரகித்து எவ்வாறு தமக்கும் தம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும் உபயோகப் படும் விதத்தில் சொல்லுவதென்று கவனிக்கத் தொடங்கினர்.

இவ்விதமே பல மாதங்கள் ஓடின. ஒவ்வொரு கடவையும் அனுபவம் நேரிடும்போதெல்லாம் கிராமவாசத்திலுள்ள சௌகரியக் குறைவைக் கவனிப்பார். தம்மைப்பற்றிய வரையிலும் அக்குறைவை நீக்க விழைவார். தம் அண்டை அயலார்களின் கூட்டுறவின்றி இக்குறை நிவர்த்திக்கப் பெறுதென்ற பொழுது, அவர்களிடம் கலந்து எல்லோருக்கும் பொதுவிலுள்ள இடைஞ்சல்களை நீக்கப் பாடுபடுவார். கூட்டுறவு கிடைக்காவிட்டால் தம் மட்டில் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு அவரவர்கள் அனுபவம் பெறுகையில் வழிப் படட்டும் என்று வாளாவிருப்பார். இதற்காக அவர்களை நொந்துகொள்ள மாட்டார். அவர்களுக்கு இவரால் ஆகக் கூடிய உதவி இருந்தால் தாராளமாகச் செய்வார்.

சிறுகச் சிறுக ஊர் ஜனங்கள் சாஸ்திரிகளிடம் பிரேமையும் பக்தியும் கொள்ள ஆரம்பித்தார்கள். ஊருக்கொரு நியாயஸ்தர் என்ற பெயர் இவரைத் தேடியடைந்தது. யோசனைகள் கேட்கவும், மத்யஸ்தம் சொல்லவும், பொது விஷயங்களில் ஊக்கத்துடன் உழைக்க ஏற்பாடு செய்யவும் பல கிராமத்தார்கள் இவரைத் தேட ஆரம்பித்தார்கள். தாலுகாத் தலைநகரத்திலும் இவர் பெயர் புகழப்படவே படித்த அறிவாளிகளும் இவர் சிநேகத்தை நாடி வரத் தலைப்பட்டார்கள். நேர்மையுடனும்,சுறு

ச்ருதி மண்டலம் - 5

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ.,பி.எல்.]

மாயவரம் ராஜமய்யர்

பஹுச்ருதி :—யார், கானச்ருதியா? அப்பா! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. எப்போதும் "ஸர்க்கூட்"டில் இருக்காப்போலே இருக்கு. நடக்க வேண்டியதுதானே.

கானச்ருதி:—எல்லாம் தேங்காய்மூடிக் கச்சேரிதான் ஜாஸ்தியாயிருக்கிறது. ஏதோ பெரியவாள் ஆசிர்வாதம் இப்போ கொஞ்சம் நடக்கிறது.

ப :—தேங்காய்மூடிக் கச்சேரி பண்ணித்தான் பிரபலமாக வேண்டும். இப்போது பெரிய பீஸ் வாங்குகிறவர்கள் எவ்வளவு தேங்காய்மூடிக் கச்சேரி செய்திருக்கிறார்கள், தெரியுமா? முதலில் கும்பாபிஷேகம், ராதா கல்யாணம், நவராத்திரி உத்ஸவம், திருவையாறு, திருவிசைநல்லூர், கோவிந்தபுரம், ஆசார்ய ஸ்வாமிகள் மடம், இந்த மாதிரியான ஸந்தர்ப்பங்கள், இடங்களில் பாடிப் பெயர் வாங்கினால், பிறகு நினைத்த பீஸ் கேட்கலாம். மேலும் ஸங்கீதத்தில் தாக்ஷிண்யத்தை அவசியம் பாராட்ட வேண்டும். யோக்கியதையும் குணமும் சேர்ந்தால்தான் யோகம் வலுக்கும். ஸங்கீதத் தொழில்—விசேஷமாய் உன் போன்ற பக்க வாத்தியக்காரர்கள் தொழில்—பொது ஜன நல்வாக்கின் பலத்தில் நடைபெறுகிறது. ஜனங்களின் மனத்தை ஆவர்ஜனம் பண்ணுகிற ஸங்கீதக் கலைக்குத் தாக்ஷிண்யத்தைத் தட்டாமலிருப்பது, தக்க சமயத்தில் வளரும் பயிருக்கு ஜலம் வார்ப்பது போல அனந்தமான விருத்திக்கு ஹேதுவாகிறது. இதை அறியாமல் சில "ஜூனியர்கள்" கிளம்பும்போதே "பிகு வுள்ளவன்" என்றோ, "கபடன்" என்றோ, "பணம் ஒன்றே குறியாயிருப்பவன்" என்றோ, ஜனங்கள் நினைக்கும்படி நடந்துகொள்கிறார்கள். வக்கீல் அல்லது டாக்டர் பரீக்ஷை "பாஸ்" பண்ணினவுடன் தன்னை ஒருவன் "அல்லாடி" என்றாவது, "ரங்காசாரி" என்றாவது நினைத்துக்கொண்டுவிட முடியுமா ?. எத்தனை "பதம்" போட்டு ஒரு மிருகத்தின் தோல் "லெதர் பாக்" ஆகிறது? வெம்பிப் போகாமல் காலத்தில் பக்குவமான பழமே உபயோகப்படும் அல்லவா? அதுபோல், ஸ்வர ஞானமும் தாளஞானமும் சாரீரமும் அல்லது வாத்தியத்தில் கைத்திறமும் இருந்தாலும், ஜனங்களுக்குப் பிரீதியுண்டாகும்படி நிரந்தரமாய் நடந்துகொள்ள வேண்டும். பணம், வருகிற காலத்தில் வரும். ஸங்கீதம் ஈச்வர ஸேவைக்கு உபயோகப்பட வேண்டிய கலை என்பதை எந்நாளும் மறக்கக் கூடாது. பெரியோர்கள் ஸந்நிதியில் பாடவேண்டும். ஜனங்களின் திருப்தியே பெரிய சம்மானமென்று நினைக்க வேண்டும். மற்றத் தொழில்களை நடத்திச் சம்பாதித்த பணத்தால் தர்மத்தைத் தேடுவார்கள். ஸங்கீதமோ, தொழில் என்று கைக்கொள்ளப்பட்டாலும் தானே நற்கதியை அளிக்கும் உத்தம மார்க்கமாகிறது. அதை ஒரு வியாபாரத் தொழிலாக எண்ணாமல் அதன் அரிய கௌரவத்தைப் பாராட்டி அதை வகிப்பது தெரிந்தவர்களுக்கு அடையாளம். கோவில், மடம், உத்ஸவங்கள், ஆராதனைகள் இவைகளில் ஏராளமான ரஸிக ஜனங்கள் வந்து கேட்பார்கள். வித்வான்களும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளலாம். ஒருவருடைய யோக்கியு

சுறுப்புடனும், சத்தியத்தில் ஒரு நம்பிக்கையுடனும், வஞ்சிப்பது ஒரு கலையாகாதென்ற தெளிவுடனும், இவர் செய்த மௌனப் பணி பிரத்தியக்ஷத்தில் பலன் தந்தது.

தையை ஒருவர் தெரிந்துகொண்டு தக்க சமயங்களில் வெளியில் பிரஸ்தாபிப்பார்கள். தேங்காய்மூடிக் கச்சேரிகளை நிராகரிப்பது தொழில் வளர்ச்சிக்கு முற்றிலும் விரோதம். "ஸெர்விஸ்" ஆன வித்வான்களுக்கும் ஒவ்வொரு சமயம் பணத்தைவிட ஈச்வரார்ப்பணம் பெரிது என்று நினைப்பதும், தாக்ஷிண்யத்தை அனுசரிப்பதும், அவர்களுடைய யசஸ்ஸுக்கு ஒரு சோபையைத் தரும். அவர்களுக்கும் அவ்வித இடங்களில்தான் ஆத்ம ஸந்துஷ்டி ஏற்படும். தியாகையர் முதலிய பக்தர்கள் அனுஷ்டித்த "பாகவத" முறையைச் சற்றேனும் அவர்கள் அனுசரித்தவர்களாவார்கள். அந்தக் காலத்தில் ராமானுஜ ஐயங்காரையும், இந்தக் காலத்தில் மதுரை மணியையும் பார்த்துக்கொள். ஜனங்கள் அவர்களிடத்தில் வைத்திருக்கும் அன்புக்குக் காரணம் அவர்களின் குணமே. அவர்கள் தொழில் எவ்வளவு உயர்ந்த திட்டத்தில் நடக்கிறது! ஸங்கீதத்தில் அன்பு முக்கியமானது. தன் மனம் கனிந்து பாடவேண்டும். பரிவுடன் பாடவேண்டும். ஈச்வரார்ப்பணம் என்று பாடவேண்டும். தியாகய்யர் முதலிய பக்திமார்க்க குருக்களிடம் க்ருதக்ஞதையுடன் பாடவேண்டும். வித்வான்களிடம் வினயத்துடன் பாடவேண்டும். இந்தக் குணங்கள் இருப்பதற்குத் தேங்காய்மூடிக் கச்சேரி ஒரு "டெஸ்டு". நீ தேங்காய்மூடிக் கச்சேரிகளுக்கு அதிகம் போய்க்கொண்டிருப்பது உன் தொழிலுக்குப் பலமான அஸ்திவாரம். உன் யோக்யதைக்குக் குணமும் சேர்ந்திருப்பதால் நீ திருக்கோடிக் காவல் கிருஷ்ணையரைப் போல் பிரபல பிடில் வித்வானாக வேண்டும் என்பது என் ஆசை.

கா: – பெரியவாள் ஆசீர்வாதம். நான் எந்தக் கச்சேரியானாலும் தட்டுகிறதில்லை. இப்போ சமீபத்தில் ஒரு கும்பாபிஷேகத்திற்குப் போயிருந்தேன்.

ப:—யார் பாட்டு?

கா:—மாயவரம் ராஜத்தின் பாட்டு.

ப:—வீணை வைத்தியநாதய்யர் பேரன் அல்லவா? பெரிய ஸங்கீத பரம்பரை அந்தக் காலத்தில் வீணை வைத்தியநாதய்யர் ஸங்கீதத்திற்கு ஒரு "அதாரிடி" மஹாவித்வான். ராஜத்தின் தகப்பனார் ஸபேசய்யர் வீணை, பிடில், மிருதங்கம், ஜலதரங்கம் எல்லாம் வாசிப்பார். உயர்ந்த யோக்யதை உடையவர். அக்ஷர சுத்தமாயும், அனுபவித்தும் அவர் பாடியது கர்ணாம்ருதமாயிருந்தது. இந்தப் பையனும் நன்றாய்ப் பாடுகிறான் என்று கேள்வி. எனக்கு வயதாகிவிட்டபடியால், நான் ஒருஇடம் போய் ஸங்கீதம் கேட்கச் சௌகரியப்படுகிறதில்லை.

கா:—நாம் மண்டலத்தில் தியாகய்யரவாள் உத்ஸவம் நடத்துகிறோமே, அதற்கு வரவழைத்துவிட்டால் போகிறது. பேஷாக வருவார். தங்களைப் போன்ற பெரிய கேள்வியுள்ள ஞானஸ்தர்கள் கேட்பது எங்கள் பாக்கியம் அல்லவா?

ப:—அவாள் பரம்பரையில் யோக்யதையோடு குணமும் விசேஷமாய் உண்டு. பையன் சாரீரம் நன்றாயிருக்கிறதென்று கேள்வி.

கா:—பேஷான சாரீரம். ச்ருதியை விட்டு இழுத்தாலும் விலகாது. பூச்சி ஐயங்கார் சாரீரம்போல் ரீங்காரத்துடன் "ஜம்" என்று இருக்கும். மேல் ஸ்தாயிப் பேச்சுக்கள் அதிக இன்பமாயிருக்கும். நல்ல கனம் கொடுத்துப் பாடுகிறான். ஆகையால் மத்யம ச்ருதி சாரீரமானாலும் காத்ரமாயிருக்கிறது. அவசியம் கேட்க வேண்டிய பாட்டு. வித்வத் பாகங்களிலும் ஒன்றும் குறைவில்லை. அதிலும் உங்களைப் போல் பழைய பாட்டுக் கேட்டவர்களுக்குப் பிரியமான பாட்டு. அன்றைய தினம் சங்கராபரணம் பாடினார். அதன் ருசி உங்களைப்போல் உள்ளவர்கள் தான் பூராவும் அனுபவிக்கமுடியும்.

ப:—சங்கராபரணமா? கடைசியாக சின்னப்பக்கிரி வாசித்துக் கேட்டது. ஸபேசய்யர் "எந்துகு பெத்தல" பாடுவார். சரணத்தில் நிரவல் ஸ்வரங்கள்

வெகு வின்யாஸமாய்ப் பாடுவார். சங்கராபரணம் பழைய காலத்தில் நாள் கணக்காய்ப் பாடுவார்கள். இப்போது பழைய சங்கராபரணம் செத்துப்போய் விட்டதென்றல்லவா நினைத்தேன்? தோடிகாம்போதிதான் அதிகப் பழக்கத்திலிருக்கிறது. சகனா, சக்ரவாகம், சங்கராபரணம், கீர்வாணி, நாடக்குறிஞ்சி, ஸாவேரி, தன்யாஸி, வராளி இவையெல்லாம்போய் இப்போது ஷண்முகப்ப்ரியா, ஹம்ஸாநந்தி, வாசஸ்பதி, விஜயநாகரி என்றெல்லாம் முழங்குகிறது. சங்கராபரணத்தைப் பல்லவி ராகமாக வைத்துக்கொண்டு விஸ்தாரமாய்க் கச்சேரிகளில் பாடிக் கேட்டு வெகு நாளாகிறது. அப்படி ஏதாவது சிறிது பாடினாலும் பாதி வரிசை காம்போதி மூர்ச்சனையாகவே காதில் படுகிறது.

கா:—அன்றையதினம் பல்லவி ராகம்பாட அவகாசமில்லை என்றாலும் ராஜம் பாடினது பழைய வைரம் பாய்ந்த சங்கராபரணம். ஸபையில் கர்னாடக வழியில் அபிமானமுள்ள ரஸிகர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு உண்டான திருப்திக்கு அளவில்லை.

ஸபேசன் ஞாபகம் வருகிறதென்று சிலாகித்தார்கள்.

ப:—வாஸ்தவம். அது கற்ற ஸங்கீதம் மட்டுமல்ல. ரத்தத்தில் ஊறின ஸங்கீதம் அல்லவா?

கா:—அக்ஷரசுத்தமும் வித்வத் பரம் பரம்பரைக்குத் தக்கபடியே யிருக்கும். கொஞ்சம் ஸம்ஸ்கிருதப் படிப்பும் உண்டு.

ப:—அது ரொம்ப அவசியம். கீர்த்தனைகள் பக்தர்களால் பாடப்பட்டவை. அர்த்த ஞானத்துடன் பாடுவது விசேஷம். அர்த்த ஞானமிருந்தால் கீர்த்தனைக் கர்த்தாவின் மனோநிலைமையைக் கொஞ்சம் அனுசரித்துப் பாடலாம். அப்போதுதான் ஸங்கீதத்திற்கு ஆத்மசக்தி ஏற்படும். ஆத்ம சக்தி இல்லாத ஸங்கீதம் தாலிகட்ட மறந்த கல்யாணம்போல். மேளவாத்தியம் சந்தன தாம்பூலம் முதலியன கல்யாணமாகுமா? ஸ்வரமும் தாளமும் ஸங்கீதமா? ஆத்ம உணர்ச்சி இருந்தால்தான் ஸங்கீதம். பாடுகிறவனுக்கு இருந்த அளவு கேட்போர்களுக்கு உண்டாகும். அந்த ஆத்ம உணர்ச்சியில் மயிர்க்கூச்சல், ஆனந்தபாஷ்பம், மெய்ம்மறத்தல் இவை உண்டாகின்றன. ஆனால் குதிரைக்கு "குர்ரம்" என்றால் யானைக்கு "யர்ரம்" என்று தீர்மானித்துக்கொள்ளக்கூடாது. தியாகய்யர் போன்ற பெரியோர்கள் கீர்த்தனைகளில் அர்த்தம் ஆத்ம உணர்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும். ஆகையால் அந்த அர்த்த அனுஸந்தானம் அவசியம். ஏனையோர்கள் க்ருதிகளில் ஆத்மவுணர்ச்சி ஸம்பந்தமில்லாத ஸாஹித்யமாயிருப்பதால் அவைகளை அர்த்தஞான மில்லாமல் பாடுவதே சிலாக்யம். மட்டமான ஸாஹித்யங்கள் ஸங்கீதத்தையும் ஹீனமாகச் செய்கின்றன.

*நாமிருப்பது பாரததேசம்
பூமிக்கிது ஒருகலைக் கோசம்

*இது கற்பனைப் பாட்டு.

எங்களுக் கேதர்ம விச்வாசம்
பொங்கு மாயிங்கு நல்லுபதேசம்

என்பதுபோலெல்லாம் ஸாஹித்யங்களை வித்வான்கள் சிலர் பாடும்போது, கஷ்டமாக விருக்கிறது. அவைகளைக் குழப்பி ஸங்கீதத்தை மட்டும் கவனித்துக் கொண்டு பாடுவதில் ஒன்றும் கெட்டுப் போய்விடாது. பெரியோர்கள் கீர்த்தனைகள் அவர்களின் ஆத்மவிகாஸத்தின் சரித்திரப் பகுதிகளாகின்றன. ராமாயணம் தேவீமாஹாத்ம்யம் ஸஹஸ்ரநாமம்போல் பாராயணம் பண்ணினாலும் புண்ணியத்தைத் தரக்கூடியவை. அர்த்தம் மட்டும் தெரிந்துகொண்டாலும் ரஸிக்கத் தக்கவை. ஸங்கீதத்துடன் பாடப்பட்டால் அது ஒரு தனி "ஸாம்ராஜ்யமே." தியாகையர் ஆண்டு அனுபவித்த சாம்ராஜ்யம் அது. அதன் பெருமையைத் தியாகையரைக் கேட்டால தெரியும்.

க:—அவரை இனிமேல் எப்படிக் கேட்கிறது?

ப:—நீ அர்த்த ஞான மில்லாதவனாதலால் இப்படிக் கேட்கிறாய். அவரைக் கேட்பானேன்? அவர் கீர்த்தனைகள் பேசுகின்றன. "ராமபக்தி ஸாம்ராஜ்யம்"; "ஸங்கீத சாஸ்திர ஞானமு" முதலிய கீர்த்தனைகளின் அர்த்தத்தைத் நீ தெரிந்துகொள்ளாத தோஷம் இப்படிக் கேட்கிறாய். பிடில்காரனுக்கும் ஸாஹித்ய ஞானம் வழவழ வென்று இருப்பது சரியல்ல. அது இல்லாத குறை குறைதான். அந்தக் காலத்தில் சரப சாஸ்திரிகள் புல்லாங் குழலில் வாசிப்பது வாயால் பாடுவதுபோல் இருக்கும். பிடில் கிருஷ்ணய்யர் வாசிப்பும் அப்படியே அக்ஷரங்களை உச்சரிப்பது போலவேயிருக்கும். அவர்கள் வாத்யங்கள் வேறு, சாரீரம் வேறு அல்ல. பக்க வாத்யக்காரனும் அக்ஷர சுத்தமான பாடம் பயின்றவனாக இருக்க வேண்டும்.

கா:—பெரியவாள் எங்களுக்குஇப்படி எடுத்துச் சொன்னால்தான் உணர்வு ஏற்படுகிறது.

ப:—நீ சொல்லுகிறபடி சாரீரமும் கர்நாடக சுத்தமான ஞானமும், அக்ஷர சுத்தியும், ஆசீர்வாதக் கச்சேரியை அலக்ஷ்யம் செய்யாத தன்மையும் இருக்கிறபடியால் அவசியம் ராஜத்தை நாம் உத்ஸவத்திற்கு வரும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

கா:—அப்படியே.

The Vanguard Insurance Company Ltd.

9-9 A., Blacker's Road, Mount Road, Madras

POINTERS OF PORGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

See whether we satisfy all these requirements.
If you are satisfied, Tell others. If not, Tell us.

Total Investments in Government and other Approved Securities : Rs. 3¾ lakhs.

H. D. RAJAH,
General Manager.

அமிர்தாஞ்சன் லிமிடெட்.

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க

ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்

கொடிக்குக் காய் கனக்குமா?

["அம்மணி"]

படர்ந்திருக்கிற ஒரு கொடியிலே கொத்துக் கொத்தாகச் சித்திரத்தில் எழுதி வைத்ததுபோல் திராக்ஷைப் பழங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கொடி அப்படியே அறுந்து விழுந்துவிடுமோ என்ற அச்சம் பார்ப்பதற்கு. ஆனால் கொடிக்குக் காய் எங்கேனும் கனப்பதுண்டா? இயற்கைச் சட்டம். அக்கொடி அத்தனை கொத்துப்பழங்களையும் அப்படியே சந்தோஷமாகத் தாங்கி விருந்தோம்பி நிற்கிறது.

அன்னம்மாள், பாவம், பரம சாது. ஆனால் தெய்வம் அவளைச் சோதித்த வண்ணமாக இருக்கிறது. எட்டாவது குழந்தையும் பெண் குழந்தையாகவே பிறந்துவிட்டது. "எதுடீ! பெண் பெண்ணாகப் பெத்து......... எனக்கு மானம் போறது" என்று கணவனும் அவள்மேல் பழி சுமத்துவான்.

"அஞ்சு பெண் பெற்றாலே ஆண்டி. கிழங்காட்டமா பார் இதை. எத்தனையோ குழந்தைகளுக்கு..........." என்று 'வாழாவெட்டி' நாத்தனார் சபிக்கும்போது, அன்னத்தின் கண்களில் நீர் துளிக்கும்; துக்கம் நெஞ்சை அடைக்கும். 'குவா, குவா' என்று வீரிடும் குழந்தையை எடுக்கப்போனால், "போதுமே அருமை! எட்டாவது பெண், குட்டிக்கரணம் போட்டு எப்படீடீம்மா பெத்தே? அதை வாரி அணைச்சுச் சீராட்ட வேறே வேணுமா? எறும்பு பிடுங்கின பிடுங்கட்டும். பசிச்சுக் கத்தின கத்தட்டும். அப்படியாவது தொலையட்டும்" என்று மாமியார் ஆசீர்வதித்தால், அன்னம் விம்முவாள்.

ஆனால் உள்ளூர அவளுக்கு ஒரு தைரியம். "போகட்டும். நான் எப்படியாவது கைப்பாடு பட்டு என் குழந்தைகளை வயிறு வாடாமல் வளர்ப்பேன். பிச்சை யெடுத்தாகிலும், வயிற்றில் பிறந்த குழந்தைகளைச் சாகவிட முடியாது. எட்டுப் பெண்களாய் இருக்கலாம்; எண்பதாய் இருக்கலாம். இருந்தாலும் கொடிக்குக் காய் கனக்குமா?" என்று பொங்கும் ஆத்திரத்தை வெளியிடுவாள் அன்னம். "போற்றி தாய்! என்று பொற்குழல் ஊதுவோம்!"

பங்கிம் சந்திரர் 'வந்தேமாதரம்' இயற்றியபோது "த்ரிம் சத்கோடி" 30 கோடிதான் நம் இந்தியாவின் ஜனத்தொகை. பிறகு 33 கோடிகள் ஆகி, 1931-ம் வருஷத்தில் 35½ கோடி ஆகிவிட்டோம். அடுத்த பத்து வருஷத்தில் 39 கோடியாகப் பெருகிவிட்டோம். பாரத தேவியின் மாமியாக வந்தவருக்கு அன்னத்தின் மாமியைப்போல் கோபம் பொங்கி எழுகிறது. "இது என்ன அநாகரிகம்! இப்படிப் பன்னிகுட்டி போடுவதுபோல் குட்டி போட்டால் எங்கிருந்து சோறு போட்டு வளர்ப்பது? காட்டுமிராண்டித்தனமல்லவா இப்படி ஜனத்தொகையைப் பெருக்குவது!" என்று சீறுகிறார்.

தானியக் களஞ்சியமாகிய நம் பாரத பூமியில் பஞ்சத்தால் மடிகிறவர்களுக்குக் கணக்கில்லை. நாம் போற்றும் தெய்வத் தாயை 'அன்னபூர்ணா' என்று செழிப்பான கங்கைக்கரையின் புண்ணிய பூமியில் வைத்து வழிபடுகிறோம். அந்த செழிப்பான கங்கைக் கரையில் தான், பிடிகவளம் இல்லாமல், கண் பஞ்சடைந்து, காது அடைத்து உயிர் துறக்கிறார்கள் அன்னபூர்ணையின் குழந்தைகள். விளையும் தானியம் போதவில்லை. ஜனப்பெருக்குக்கேற்ற தானியப்பெருக்கில்லை. ஜனப் பெருக்கத்தைக் கண்டிப்பாக நிறுத்தவேண்டும். எங்களால் இந்த 40 கோடி வாய்களுக்கும் சோறு போட முடியாது, சாகட்டும்!—என்று உதாசீனமாக இருக்கமுடியுமா?



குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம் பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியான சிகித்சை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்.,
தபால் பெட்டி 63, மதராஸ்.

இருபது வருஷங்களுக்குமுன் நம் நாட்டின் பெரியாரே, இளைஞர்கள் கலியாணம் செய்துகொள்வதை அரை மனசுடன் ஆதரித்து, அப்படி மணந்தாலும் பின்னர் பிரமசரியத்தையே அனுஷ்டிக்க வேண்டுமென்று சொன்னார். எதற்காக என்றால், நாடு அடிமை நாடு, பராதீனமான ஒரு அடிமை ஜாதியைப் பெருக்குவது இழிவு - என்ற எண்ணத்தால் எழுந்த உபதேசம் அது. ஜனத்தொகையை அதிகரிப்பது அநாகரிகம் என்றோ, பாரம் தாங்காது பாரத பூமி, என்றோ சொன்னதல்ல.

ஆனால் இந்த 'அநாகரிக'க் காரியத்தைச் செய்யச்சொல்லி, இரட்டைகளைப் பெறும் தாய்க்குப் பரிசும், பத்துக் குழந்தைகளைப் பெற்ற தாய்க்குப் பேருபசாரமும் வழங்குகிறார்கள், நாகரிக ஏணியில் மேல் படியில் இருக்கும் நாட்டினர். ஏனென்றால், நாகரிக சின்னம்தான் இந்தப் பெரும்போர். அதற்கு ஈடுகொடுக்க மனுஷ்ய பலம் வேண்டும். வெறும் யந்திர பலம் மாத்திரம் என்ன செய்யும்? பால் வடியும் முக முள்ள இளைஞர்களையும் கூவி அழைக்கின்றன பீரங்கிகளும் குண்டுகளும். இதற்காக ஜனத்தொகையை விருத்தி செய்யப் புத்திரகாமேஷ்டி செய்யும்படி உத்தரவு பிறப்பிப்பதில் என்ன வியப்பு? பல (Industrialised) மேல் நாடுகள் சென்ற 20 வருஷங்களில் இரட்டிப்பாகப் பெருகி யிருக்கிறது. 50 லக்ஷம் ஜனங்கள் 100 லக்ஷமாக மாறியிருக்கிறார்கள். நம் நாட்டில் 10-20 சதவிகிதம் தான் பெருக்கு. 'மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் வெண்கலம்!' இப்படியிருக்கப் பாரத தேவியை "உனக்குப் பிள்ளைப் பேறு அதிகமாகிவிட்டது. பூ பாரம் தாங்காது. உன் களஞ்சியத்தில் ஒன்றுமில்லை. ஆகையால் பஞ்சத்தால் உன் குழந்தைகள் மடிவதை நீ பார்த்துக் கொண்டு தான் இருக்கவேண்டும்!" என்று சொன்னால், அந்தத் தாய் 'கொடிக்குக் காய் ஒருபோதும் கனக்காது' என்று இயற்கைச் சட்டத்தைச் சுட்டிக்காட்டத்தானே வேண்டும். "என்னிடம் இருக்கும் நிலங்களைச் சரியாகப் பயிரிட்டு, விளைவைச் சரிவரப் பங்கிட்டால் என் குழந்தைகளுக்குப் பசி தீரும். ஆனால் அவ்வாறு செய்ய உங்களுக்கு யோக்கியதை யில்லை!" என்று சொல்லமாட்டாளா?

உணவுக் குறைவு ஏன் வரவேண்டும்? நம் நாட்டில் யுத்த நிமித்தமாக ராணுவம் வந்து ஏராளமாகத் தங்கியிருக்கிறது. அவர்களை வயிறு வாடாமல் காப்பாற்றினால்தான் அவர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள். தவிர, பர்மாவில் நம் சகோதரர்கள் ஏராளமாகக் குடியேறி யிருந்தார்கள். அந்நாடு கை நழுவியதும் அவர்களில் அநேக லக்ஷம் பேர்களை எங்கள் வீட்டில் இடமில்லை என்று தள்ள முடியுமா? "ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்" என்ற மனப்பான்மை தொன்றுதொட்டு இரத்தத்தில் ஊறியிருக்கிறதல்லவா? ஆகையால் அவர்களையும் சேர்த்துக்கொண்டோம்.

இப்பொழுது யுத்தத்திற்காக வெளிநாடு சென்றிருக்கும் நம் பிள்ளைகளுக்குச் சாப்பாடு எங்கிருந்து கிடைக்கும்? ஆகவே அவர்களுக்கும் சாப்பாடு நாம் தான் அனுப்ப வேண்டும். இந்த லக்ஷணத்தில் உணவுப் பொருள் பர்மா முதலிய இடங்களிலிருந்து நமக்கு வருவதும் அடியோடு நின்றுவிட்டது. இப்படியெல்லாம் இருந்தாலும் வாரத்திற்குப் பதினாயிரக் கணக்காக மடிவதற்குத் தகுந்த பஞ்சம் வரக் காரணம் இவை மட்டும் அல்ல.

1931ல் 430 லக்ஷ ஜனங்களுக்கு உணவு இல்லை. ஆனால் 1,100 லக்ஷம் ஏகரா நிலம் உழுது பயிரிடாமல் பாழாகிக் கிடக்கிறது என்று சொன்னார்கள். அப்பொழுது தேச மெய்த்தொண்டர்கள் 'கிராமத்துக்குப் போ' என்ற இயக்கத்தின்மூலம் வியவசாயப் புனருத்தாரணத்தையும், கிராம நிர்மாணத்தையும், குடிசைக் கைத்தொழில் திட்டங்களையும் கொண்டுவந்து பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். வியவசாயிகளுக்கு

நூதனமுறைச் சாகுபடி, உயர்ந்த வித்துக்களின் பாதுகாப்பு முதலிய அரிய விஷயங்களைக் கற்பிக்க முன் வந்தார்கள். அந்த முயற்சி முதிர்வதற்குப் போதுமான உத்ஸாகத்தை அரசாங்கம் ஊட்டவில்லை; விவசாயம் க்ஷீணித்த நிலையில்தான் இருந்தது.

கிராமக் குடியானவன் வருஷத்தில் 150—200 நாட்கள்தான் வேலை செய்கிறான். அவ்வளவுக்குத்தான் அவனுக்கு வேலையிருக்கிறது. மறுபயிர், மாற்றுப்பயிர்கள், (rotation and alternation of crops), பற்றிய விவர ஞானமோ, வசதியோ, வேறு விதமான தொழிற் சமத்தோ அவனுக்குக் கிட்டவில்லை. மூன்று போகம் விளைந்தால் கிஸ்தி ஏறுமே என்ற ஒரே பயம்தான் அவன் அறிந்தது. வருஷத்தில் அவன் 160 நாள் வேலையில்லாமல் இருந்தால், எவ்வளவு ஜன சக்தியும் உத்பத்தி-சக்தியும் நஷ்டம்! 1,100 லக்ஷம் ஏகரா சும்மா கிடந்தால் எப்படி அபார நஷ்டமோ, அப்படி ஒவ்வொரு குடியானவனும் வருஷத்தில் பாதி நாள் வேலையில்லாமல் இருந்தால் பெரு நஷ்டந்தானே! இத்தகைய காலத்தில் அவனுக்குச் சற்று ஊன்றுகோலாகுமே குடிசைக் கைத்தொழில் என்றாலோ, அதுவும் இன்னும் கண்ணை விழித்து ஆளைப் பார்க்கும் பருவமே அடையாத பச்சைக் குழந்தையாக இருக்கிறது. பூமியின் சத்தும், மனித சக்தியும் வீணுவதைப் பயன் படுத்திக் கொள்ளாமல் தானியம் போதவில்லை என்று கூப்பாடு போட்டாலும், பஞ்சம் வந்த பின் "அதிக உணவை உற்பத்தி செய்யுங்கள்" என்றாலும் 'கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம்' செய்வது போலத்தான்!

பயிராகாமல் வீணாகக் கிடக்கும் நிலங்களைச் சரியானபடி சாகுபடி செய்து உற்பத்தி - சக்தியை அதிகரிக்கச் செய்தும், விவசாய ஞானமும் உத்ஸாகமும் ஊட்டி வழிகாட்டி மனித சக்தியைச் சரிவரப் பயன்படுத்தியும் (well-planned agriculture) நன்றாக முறைப்படி செய்யும் பயிர்த் திட்டத்திற்கு இணங்க நடந்தால் அவசியம் பயன் கிடைக்காமல் போகாது.

தற்சமயம், தொழில் தேர்ச்சி (skilled labour) மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. ஒரு கிராமத்தில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் நூற்றுக்கு 5—10 பேர்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள், வெறும் தொழில்தான் - (unskilled labour) மடத்தொழில் என்றுகூடச் சொல்லலாம் — செய்ய வல்லவர்கள். ஆகையால்தான் சராசரி (average) தொழிலாளியின் வருமானம் மிக மிகக் குறைவாக நாள் ஒன்றுக்கு ஒன்றரையணு வீதம் இருக்கிறது. ஸ்திரீகளிலோ தொழில்-தேர்ச்சி சூன்யம் என்றே சொல்லிவிடலாம்.

தொழிலாளர்களுக்குத் தேர்ச்சியும், கல்வியறிவும் கிட்டும்படி செய்து, அவர்களுடைய சம்பாதிக்கும் திறமையைப் பெருக்குவது முக்கியமான கடமையாகும். 'முதியவர் கல்வி இயக்கம்' என்று ஒன்று பிறந்ததென்றால் அதுவும் கவனிப்பாரற்ற அனாதையாகவே யிருக்கிறது!

விவசாயம் இப்படியிருக்க, மற்றத் தேசங்களோடு ஒத்து வாழும் ஒரு பதவிக்கு வரவும், விஞ்ஞான வளர்ச்சியைப் பயன் படுத்திக் கொள்ளவும், நாட்டைத் தொழில் மயமாக்குவது (industrialisation) அவசியமாகும். ஆனால் அதை முன்னேற்றப் பணமில்லை. அந்தத் தவறு, தேசச் செல்வ விருத்தி நிர்வாகிகளையும் வரவு செலவு வகுக்கும் வர்க்கத்தினரையும் சார்ந்தது.

தற்சமயம் பணவீக்கம் மூன்று பங்குக்குமேல் ஆகியிருக்கிறது. நடமாடும் பணம் 240 கோடி ரூபாயிலிருந்து 750 கோடியாக வீங்கிப் பெருகியிருக்கிறது. வீக்கமும் ஒரு பெரிய நோய். பணம் இப்படி மலிந்து கிடக்க, இந்தியக் குடியானவனின் (purchasing power) பொருள்கொள்ளும் சக்தியோ அதிகரிக்கவில்லை. அவன் வருமானம் வருஷத்திற்கு 60 ரூபாயாகவே யிருக்கிறது. சாமான்களின் விலை 3, 4

விக்கிரமாதித்தனுக்கு ஒரு ஜயஸ்தம்பம்

விக்கிரம சகாப்தம் கி. மு. 57-ல் ஆரம்பமாயிற்று என்றும், இப்போது இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்றும் சொல்லுகிறார்கள். இந்த இரண்டாயிர ஆண்டு விழாவைக் கொண்டாடி விக்கிரமாதித்தனுக்கு அவனுடைய தலைநகரமாயிருந்த உஜ்ஜயினி நகரத்திலே நினைவுக்குறியாகிய ஒரு ஜயஸ்தம்பம் நாட்டுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். இது மிகவும் அவசியமான காரியங்களில் ஒன்று.

நமது தேச சரித்திரத்திலே சுதந்திர லட்சுமியின் உபாஸகர்களாக விளங்கிய பிரசித்தி பெற்ற இந்திய வீரர்களில் விக்கிரமாதித்தன் ஒருவன். இவன் தர்ம வீரனாகவும் கர்ம வீரனாகவும் விளங்கி இந்து நாகரிகத்திற்கும் இந்து தர்மத்திற்கும் புத்துயிர் அளித்தான்.

விக்கிரமசகாப்தக் கணக்கைச் சரித்திரக்காரர்கள் ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் விக்கிரமாதித்தன் கி.பி. 375-413ல் அரசுபுரிந்தான் என்கிறார்கள். மற்றப்படி, அவனுடைய வீரப் பெருமைகளையும் வெற்றிப் பெருமைகளையும் சரித்திரம் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறது.

காளிதாச மகாகவி முதலான பிரசித்திபெற்ற நவமணிகள் விக்கிரமாதித்தன் காலத்தில் வாழ்ந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த நவமணிகளையும் மேலே குறித்த ஜயஸ்தம்பத்தில் சிற்ப வடிவங்களில் அமைத்து வைக்கப்போகிறார்களாம். வீரமணியாக விளங்கிய விக்கிரமாதித்தனே ஓர் அருங் கலைமணியாகவும் விளங்கியதாகச் சரித்திரம் சொல்லுகிறதல்லவா ?

‘விக்கிரமாதித்தன்’ என்பது ஒரு பட்டப் பெயர்தான். இவனுடைய உண்மையான பெயர் ‘சந்திரகுப்தன்.’ இவனை இரண்டாவது சந்திரகுப்தனென்று சரித்திரம் சொல்லுகிறது. பராக்கிரமத்தில் சூரியனைப் போல் விளங்கியதால் இந்த வீரமன்னனுக்கு ‘விக்கிரமாதித்தன்’ என்று பட்டப் பெயர் வந்ததாம்.

இவன் காலத்திலே இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தொடர்பு இருந்தது. சீன யாத்திரிகனான பாஹியன் அந்தக் காலத்திலே தான் கண்ட செழிப்பான இந்தியாவை உருக்கமாக வருணித்திருக்கிறான்.

“அரசனைப் பொது ஜனங்களின் தொண்டனாகப் படைத்தான் படைப்புக் கடவுளான பிரமதேவன்” என்பது அர்த்த சாஸ்திரத்தின் சாரமான அரசியல்-கொள்கை. இந்தக் கொள்கைப்படி அரசாண்டு இந்து தர்மத்திற்கு ஜயத்தை அளித்த விக்கிரமாதித்தனுடைய நினைவு இன்று நமக்கு உள்ள சோர்வைப் போக்குவதற்கு எவ்வளவோ உதவியாக இருக்கும்.

பங்கு ஏறியிருக்க அவன், கொம்புத் தேனை முடவன் பார்ப்பதுபோலவே ஏங்கி நிற்கிறான்.

எந்தப் பிரச்னையை எடுத்தாலும், ஒழுங்குபடுத்த உறுதியான தேசீய ஆட்சி வேண்டும் என்றுதான் சுற்றிச் சுற்றி வந்து ரங்கராட்டினக் குதிரை போல் ஆரம்பித்த இடத்திலேயே வந்து நிற்கவேண்டியிருக்கிறது.

அவன் எங்கெங்கே இருந்தாலும் 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுகிறான்

எந்த இடத்தில வேடிக்கை நடக்கிறதோ, அவ்விடத்தில் அவனை முதலில் காணலாம்! அவனுடைய தாயாருக்கு அவன் எங்கே போயிருக்கிறான் என்பது தெரியாது; ஆனால் அவன் வீடு திரும்பும்பொழுது அவன் உடம்பு முழுதும் அழுக்கு பூசி இருக்கும் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் 'அழுக்கு அபாய'த்திலிருந்து ரக்ஷிக்கப்படுகிறான் என்று தெரியாமல் இருந்தால் அவளுக்கு எவ்வளவு கவலையுண்டாகும். அநேக வருஷங்களுக்கு முன் அவளுக்கு டாக்டர் அழுக்கிலிருந்து கிருமி ரோகங்கள் உண்டாகின்றன என்று சொல்லியிருக்கிறார். அவர் தவறாமல் குழந்தைகளை லைப்பாய் சோப்பினால் ஸ்நானம் செய்வித்தால் அப்படிப்பட்ட அபாயங்களிலிருந்து காப்பாற்றலாம் என்றும் விளக்கியிருக்கிறார். லைப்பாய் ஓர் விசேஷ நிவாரண சோப். லைப்பாய் சோப் ஆரோக்கியத்தை ரக்ஷிக்கும் தன்மையுள்ளது.

லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றி விற்கப்படுகிறது



L. 48-50 TM   LEVER BROTHERS (INDIA) LIMITED

Regd. No. M. 3957 The Bharata Mani



மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மென்ட் சோப் பாக்டரி, பெங்களூர்

Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras. Printed by T. V. Volaganatha Mudaliar Sadhu Press, 12, Ganapathy Mudali Street, Royapettah, Madras.